பேளூர்
அன்னை தர்மசம்வர்த்தினி உடனாய அருள்மிகு தான்தோன்றீசுவரர் ஆலய வரலாறு

மருத்துவர். சி.பொன்னம்பலம் MBBS



சேலம் வரலாற்று ஆய்வு மையம்

பேளூர்
அன்னை தர்மசம்வர்த்தினி உடனாய
அருள்மிகு தான்தோன்றீசுவரர்
ஆலய வரலாறு

மருத்துவர் சி.பொன்னம்பலம் MBBS

சேலம் வரலாற்று ஆய்வு மையம்

பேளூர் அன்னை தர்மசம்வர்த்தினி உடனாய
அருள்மிகு தான்தோன்றீசுவரர் ஆலய வரலாறு

ஆசிரியர்: மருத்துவர் சி.பொன்னம்பலம் MBBS

பதிப்புரிமை: சேலம் வரலாற்று ஆய்வு மையம்
பதிப்பு: முதற் பதிப்பு ஜனவரி 2026 | பக்கங்கள்: 46
அச்சிட்டோர்: விவேகா பதிப்பகம், வாழப்பாடி,
சேலம் மாவட்டம். தொடர்புக்கு: 9600969118

விலை: ரூ.50

கள ஆய்வில் உதவிய அன்பர்கள்

திரு. வீரராகவன், விழுப்புரம்
கல்வெட்டியல் ஆய்வறிஞர்
திரு. பொன். வெங்கடேசன், ஆறகழூர்
தலைவர், சேலம் வரலாற்று ஆய்வு மையம்
புலவர் திரு. வீரமணி வீராசாமி, பேளூர்
துணைத்தலைவர், சேலம் வரலாற்று ஆய்வு மையம்
முனைவர். கவிஞர். திரு. பெ.பெரியார் மன்னன், வாழப்பாடி
இணைச்செயலர், சேலம் வரலாற்று ஆய்வு மையம்
திரு. ஜீவ நாராயணன், பெத்த நாயக்கன் பாளையம்
பொருளாளர், சேலம் வரலாற்று ஆய்வு மையம்
நாமகிரிப்பேட்டை திரு. துரைசாமி
திரு. வை.கலைச்செல்வன் ஆசிரியர்
திரு. பெருமாள், ஆசிரியர்
திரு. K.S. ஜெயராமன், நல்லாசிரியர் (ஓய்வு),
பேளூர் நற்பணி மன்றம்
திரு. கிருஷ்ணமூர்த்தி, வரலாற்று ஆர்வலர், பேளூர்
பேளூர் தான்தோன்றீசுவரர் கோவில் செயல் அலுவலர்

அணிந்துரை

மருத்துவர் பொன்னம்பலம் ஆராய்ந்து எழுதியுள்ள அன்னை தர்மசம்வர்த்தினி உடனாய அருள்மிகு தான்தோன்றீசுவரர் திருக்கோவில் தலவரலாறு புத்தகத்தை முதலிலேயே படிக்கும் புண்ணியனானேன்!

உயர்நிலை படிப்பு முழுக்க பேளூர் என்பதால் பள்ளி வகுப்புகள் முடிந்து தினந்தோறும் மாலைப்பொழுது ஒரு மணி நேரம் கோவில் வளாகங்களிலும், அப்போது வற்றாத ஜீவநதியாக கோவிலின் புறவாசலில் ஓடிக்கொண்டிருந்த வசிஷ்ட நதியில் குளித்து விட்டு வீடு திரும்புவதாக பள்ளிக்காலம் ஓடியது!

அன்றைக்கு கோவிலின் ராஜகோபுரம் இடிந்து சிதிலமாகக் கிடந்தது. கோவிலின் உள்ளே மின்வசதி இல்லாமல் இருண்டு, வவ்வால்கள் எங்கெங்கும் பறந்து கொண்டு ஒரு பாழடைந்த கோவிலுக்கான அச்ச உணர்வைத் தருவதாக இருக்கும்.

சிறு வயதிலேயே பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், கடல் புறா எல்லாம் படித்து விட்டு, ஏன் சேர நாட்டில் வந்து பிறந்தோம் என்று என்னை நானே இகழ்ச்சியாய் எண்ணிக்கொண்டிருந்த காலம். சோழர்களுக்கும், பாண்டியர்களுக்கும், பல்லவர்களுக்கும் இருந்த வரலாறும், புதினங்களும் சேரர்களுக்கு இல்லையே என வருந்திக் கொண்டிருந்த காலம். பாடப்புத்தகங்களிலும் சேரன் செங்குட்டுவனைத் தவிர வேறெந்த சேர மன்னனின் புகழும் தெரியாத நிலை.

தான்தோன்றீசுவரர் சந்நிதிக்கு போகும் போதெல்லாம் இந்த கோவில் எப்போது கட்டப்பட்டிருக்கும்... எந்த நூற்றாண்டு கோவில் இது... இதன் தல வரலாறு என்ன என்பதான என் கேள்விகளுக்கு விடை சொல்ல அங்கே யாருமே இல்லை என்பதுதான் மெய். கருவறையில் தூரத்தில் தானாகவே தோன்றிய இரண்டரை அடிக்கு மேலான லிங்க வடிவிலான சிவனிடம், அந்த மின்மினி எண்ணெய் விளக்குகள் வெளிச்சத்தில் தரிசிக்கும் போதெல்லாம் வினவியிருக்கிறேன்.

எங்கேயோ இருக்கிற கைலாயத்தில் நீ செய்யும் விளையாட்டுகள் குறித்து உன் வரலாறு கேட்பவர்கள் எல்லாம் சொல்கிறார்கள்... என் கண் முன்னே இருக்கும் உன் வரலாறு மட்டும் இங்கே யாருக்கும் தெரியவில்லையேயெனப் புலம்பி இருக்கிறேன். அப்புறம் ஓரிருவர் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு மிளகு செட்டி என்ற ஒருவர் வியாபாரம் செய்ய வந்து இந்த கோவிலை கட்டினார் என்பதாக அவர்கள் கேட்ட கதையைச் சொன்னார்கள். வெறும் முந்நூறு ஆண்டுகள்தான் இந்த கோவிலின் ஆரம்ப காலமா என்று மனம் நம்பாமலேயே ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் காலம் ஓடிப்போனது.

இதோ எனது அகவை எழுபதில் அதிகாரப்பூர்வமாக ஆராய்ந்து, பல வருடங்கள் கடுமையாக உழைத்து, பற்பல ஆதாரங்களோடு ‘சமூக மருந்தாளி’ டாக்டர் அரிமா பொன்னம்பலம் அவர்கள் எழுதியுள்ள இந்த நூல், சிவ பக்தர்களுக்கு மட்டுமல்ல, சேலம் மாவட்டத்தின் ஆயிரம் ஆண்டு வரலாற்றையே தரணிக்கு உணர்த்தும் வண்ணம் கல்வெட்டில் பொறித்த பட்டயமாக வெளி வந்திருக்கிறது.

பேளூர் அங்காளம்மன் கோவிலில் கிடைத்த கல்வெட்டில் கிபி 943ஆம் ஆண்டிலேயே முதலாம் பராந்தக சோழன் காலத்துக்கும் முந்தையது தான்தோன்றீசுவரர் சன்னதியின் கர்ப்பக்கிரகம் என்ற ஆதாரத் தகவல், நெஞ்சில் ஒரு குடம் தேனை வார்த்தது. அதிலும் அந்த சோழனின் 41ஆம் ஆட்சியாண்டில் அந்தக் கல்வெட்டு பொறிக்கப்பட்டது என்ற தகவல் எல்லாம் என்னை உச்சிக் குளிர வைத்து விட்டது!

ராஜராஜ சோழன் கட்டிய தஞ்சை பெரிய கோவிலுக்கும் மூத்தது நம் பேளூர் தான்தோன்றீசுவரர் கோவில் என்பது நமது மண்ணின் தொன்மையைப் பறை சாற்றுகிறதே! நமது மூதாதையர் பெருமையைக் கண்டு கர்வமும், களியாட்டமும் நெஞ்சில் கூடுதே!

ஆராய்ச்சியாளர் பொன்னம்பலம் அத்தோடு நிறுத்திக்கொள்ளவில்லை. பத்தாம் நூற்றாண்டு தொட்டு சோழருக்குப் பிறகு பாண்டியர்கள், பின் சிறிது காலம் முகலாயர்கள், அவர்களை வென்று விஜயநகரப்பேரரசு நாயக்கர் மன்னர்களால் ஆளப்பட்ட காலம் வரை ஆராய்ந்து, ஆதாரங்களோடு எழுதியிருக்கிறார். சோழர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோவிலுக்கு நாயக்கர்கள் காலத்தில் விரிவாக்கம் செய்து நிறைய தூண்கள் எழுப்பி கோவிலைப் பிரம்மாண்டமாக்கியதை சொல்கிறார்.

பேளூர் எனப்பெயர் வந்த விதம், வசிஷ்ட நதியின் மூலப்பெயர், வரலாறு, கோவிலுக்காகப் பாடுபட்டு சிலைகளாக இருக்கும் கணம்புல்ல நாயனார், மிளகு செட்டி, பச்சை கந்த சுவாமிகள் போன்றோரின் வரலாறு, தர்மசம்வர்த்தினி கோவில் வரலாறு, உள்மண்டபங்கள், தூண்களின் வரலாறு என ஒன்று விடாமல் சொல்லியிருக்கிறார்.

இதில் வியப்புக்குரியது கோவிலின் வடகிழக்கில் உள்ள சுற்றுச் சுவரில் நாமெல்லாம் பொன்னியின் செல்வனில் படித்த அதே ஆதித்த கரிகாலனின் கல்வெட்டு இருப்பதையும் ஆராய்ந்து சொல்கிறார். அதில் ‘வீரபாண்டியன் தலை கொண்ட’ ஆதித்ய கரிகாலனின் 3ஆவது ஆட்சியாண்டு என்று பொறித்திருப்பதைச் சொல்கிறார்.

முக்கியமாக கோவிலின் தல வரலாறு பற்றிய தகவல்கள்தான் என்னை உலுக்கியது. அந்த தல வரலாறு தெரியாமல்தானே ஐம்பது ஆண்டுகளாய் ஏங்கிப்போய் இருந்தேன். கூடற்கிழார், அட்டாவதனம் சொக்கலிங்கப்புலவர் என்பவர் செய்யுள் வடிவில் 13 அத்தியாயங்களாக, 653 செய்யுள்களில் கோவிலின் தல வரலாறு எழுதியிருப்பதை ஆராய்ந்து சொல்கிறார்.

அவர் எழுதியிருக்கும் 32 பக்கங்களுக்காக எத்தனை ஆண்டுகள் ஆராய்ந்து, ஆதாரங்களைத் திரட்டி, எவ்வளவு உழைத்திருப்பார் என்பதை எண்ணிப்பார்க்கவே பிரம்மிப்பாய் உள்ளது. அவர் இதையெல்லாம் வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்றெல்லாம் எழுதி விடவில்லை. ஒவ்வொரு தகவலுக்கும் ஆதாரங்கள் தருகிறார்.

ஐந்து கல்வெட்டுகளின் தகவல்களைச் சொல்கிறார், அவரே அந்த ஆதாரங்களுக்கு எடுத்த அழகான புகைப்படங்களையும் பொருத்தியிருக்கிறார். நூலில் அந்த கல்வெட்டுகள், ஆதாரங்கள் அத்தனையும் பதிந்திருக்கிறார். அதிலும் கோவிலின் நீளம் 197அடி, அகலம் 98அடி என்ற தகவல் எல்லாம் "சான்ஸே இல்லை அய்யா" என்றளவுக்கு வியப்புதான்.

இன்னும் நிறைய எழுதலாம்தான்... அவ்வளவு தாக்கத்தை இப்புத்தகம் என்னுள் ஏற்படுத்தி இருப்பினும், புத்தகப் பக்கங்களை விட என் அணிந்துரை பக்கங்கள் நீண்டு விடும் என்பதால் அடக்கிக்கொள்கிறேன். முடிவாக — சிவனின் ஆசியின்றி டாக்டருக்கு இது சாத்தியப்பட்டிருக்க வாய்ப்பில்லை.

சிவசக்தியின் பேரருள் பொன்னம்பலத்துக்கு நிரம்பவே இருப்பதாலேயே இந்த புத்தகத்தை இத்தனை ஆராய்ந்து, இவ்வளவு தெளிவுற எழுத முடிந்திருக்கிறது.

காலம் கடந்தும் பேசப்படக்கூடிய, வாசிக்கப்படக்கூடிய இந்த பெருமைமிகு புத்தகத்திற்கு, அணிந்துரை எழுதும் வாய்ப்பை எனக்கு வழங்கி, இந்த புத்தகத்தில் என் பெயரும் வாசிக்க காரணமான பெருமகனாருக்கு என் இதயப்பூர்வ நன்றி.

— அரிமா. M.சந்திரசேகரன் MJF
பட்டயத் தலைவர், வாழப்பாடி அரிமா சங்கம்

வாழ்த்துரை

வரலாறு என்பது வெறும் கடந்த கால நிகழ்வுகளின் தொகுப்பு மட்டுமன்று. அது நம் முன்னோர்களின் வாழ்வியல், கலை மற்றும் நம்பிக்கைகளின் சான்றாகும். அவ்வகையில் சேலம் மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க அடையாளங்களில் ஒன்றான பேளூர் தான்தோன்றீசுவரர் திருக்கோவிலின் சிறப்புகளைப் பறைசாற்றும் விதமாக இந்த நூல் அமையப்பெற்றுள்ளது.

இந்த நூலை எழுதியுள்ள மருத்துவர் பொன்னம்பலம் அவர்கள், சேலம் வரலாற்று ஆய்வு மையத்தின் செயலாளராகப் பணியாற்றி வருபவர். ஒரு மருத்துவராக இருந்து கொண்டு, வரலாற்றின் மீதான பேரார்வத்தால் அரிய பல வரலாற்றுத் தரவுகளைத் திரட்டி இந்த நூலை வடிவமைத்துள்ளார்.

இந்த நூலின் சிறப்பம்சங்கள்:

- கல்வெட்டு ஆதாரங்கள்

பேளூர் அங்காளம்மன் கோவிலில் கண்டறியப்பட்ட முதலாம் பராந்தக சோழன் காலத்துக் கல்வெட்டு முதல் 17ஆம் நூற்றாண்டு நாயக்கர் கால கல்வெட்டுகள் வரை மிகத் துல்லியமான ஆதாரங்களுடன் பேளூரின் தொன்மை விளக்கப்பட்டுள்ளது.

- பெயர்க்காரணம் மற்றும் தொன்மம்

'நிவா நதி' என்றழைக்கப்பட்ட வசிஷ்ட நதிக்கரையில் அமைந்துள்ள பேளூர், எவ்வாறு 'வேள்வியூர்' என்பதிலிருந்து மருவி, ‘வெளியூர்’ எனக் கல்வெட்டுகளில் பதிவாகி, இன்றைய நிலையை எய்தியது என்பதை ஆசிரியர் புராணச் செய்திகளுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

- கலை மற்றும் சிற்பச்சிறப்பு

தான்தோன்றீசுவரர் கோவிலின் கருவறை, அர்த்த மண்டபம் மற்றும் மகா மண்டபத்தில் உள்ள யாளித் தூண்கள், குதிரை வீரன் சிற்பங்கள் போன்ற சிற்பக்கலை நுணுக்கங்களை இந்நூல் விரிவாக எடுத்துரைக்கிறது.

- திருப்பணி செய்த பெருமக்கள்

மிளகுச் செட்டியார், பச்சை கந்த சுவாமிகள் போன்றோர் இக்கோவிலுக்கு ஆற்றிய திருப்பணிகளையும், அவர்களின் வரலாற்றுப் பின்னணிகளையும் ஆசிரியர் சுவை குன்றாது பதிவு செய்துள்ளார்.

பேளூரைச் சுற்றியுள்ள கல்வெட்டுகள், வரலாற்றுத் தரவுகள், முதன்மையாய் ஆலயத்தின் அருகே விவசாய நிலத்தில் உள்ள மூக்கறுப்புப்போர் குறித்த அரிய கல்வெட்டு மற்றும் பேளூர் அங்காளம்மன் ஆலயத்தில் உள்ள 9ஆம் நூற்றாண்டு முதலாம் பராந்தக சோழனின் கல்வெட்டுகளை ஆவணப்படுத்துவதில் முக்கிய பங்காற்றியுள்ளார்.

வரலாற்று ஆய்வாளர்கள் முதல் ஆன்மிகப் பெரியோர்கள் வரை அனைவரும் வாசிக்க வேண்டிய ஒரு திரவியமாகத் திகழும் இந்நூலை நமக்களித்த மருத்துவர் பொன்னம்பலம் அவர்களின் பணி போற்றுதலுக்குரியது. சேலம் மாவட்டத்தின் வரலாற்றுத் தடயங்களை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் இவரது முயற்சி சிறக்க வாழ்த்துகிறேன்.

நன்றி.

— ஆறகழூர் பொன்.வெங்கடேசன்,
தலைவர், சேலம் வரலாற்று ஆய்வு மையம்.

வாழ்த்துரை

இந்நூலாசிரியர் இனிய நண்பர் மருத்துவர் திரு.சி.பொன்னம்பலம் அவர்கள், எச்செயல் செய்தாலும் நேர்த்தியாகவே செய்து பழகியவர். இவரது எல்லா செயல்பாடுகளும் பாராட்டுதல்களைப் பெறும். தொன்மையான கோவில்கள் மீது தீராப்பற்று கொண்ட இவர், பழங்கற்றளிக் கோவில்களைத் தேடித்தேடிச் சென்று கற்சிலைகள், கல்லோவியங்களை ஒளிப்படங்கள் எடுத்து பகிர்ந்து, காண்போரை வியப்புறச் செய்து, அக்கோவிலை நாமும் விரைவில் காண வேண்டும் என்ற அவாவைத் தூண்டும் ஒளிப்படக் கலைநுணுக்கம் மிக்கவர். தனது அற்புதமான கற்சிலை ஒளிப்படங்களுக்கு, சங்கப் பாடல்கள் விளக்கங்களோடு சமூக ஊடகங்களில் இவர் தரும் பதிவுகளுக்கு வரலாற்று அறிஞர்களும் புருவம் உயர்த்தி பாராட்டுகின்றனர். அண்மையில் மலேசியாவில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டு மலரில் இடம் பெற்றிருந்த அனைத்து ஒளிப்படங்களும், இவரது கலைக்கண் கைவண்ணமே என்பதே இதற்குச் சான்று. இத்தகைய ஆற்றலுக்கு உரித்தான இந்நூல் ஆசிரியர் மருத்துவர் சி. பொன்னம்பலம் அவர்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க ‘நிவா’ நதியான வசிஷ்ட நதிக்கரையில், ஆயிரம் ஆண்டுகளாக அருள்பாலித்து வரும் வேள்வியூர், திருவேள்வியூர் என வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ள, பேளூர் தான்தோன்றீசுவரர் திருக்கோவிலின் தல வரலாற்றை முழுமையாக தொகுத்து, அற்புதமான சிறு நூலாக நம் கரங்களில் தந்துள்ளார்.

எதையும் நேர்த்தியாக செய்யும் இவர் இக்கோவில் வரலாற்றில் எதையும் விட்டுவிடாமல், யாழி குதிரை தூண்கள், திருத்தொண்டர்கள், கல்வெட்டு ஆவணங்கள் ஆகியவற்றையும் ரத்தினச் சுருக்கமாகத் தொகுத்து மிக நேர்த்தியாக இந்நூலை நமக்குப் படைத்தளித்துள்ளார். இந்நூலை முன்மாதிரியாகக் கொண்டு, தமிழகத்திலுள்ள பிற பழமையான கோவில்களுக்கும் இதுபோன்று சிறப்பான தல வரலாற்று நூலை உருவாக்கிட வரலாற்று அறிஞர்களும், ஆர்வலர்களும் முன் வர வேண்டும். மதிப்புமிக்க நல்மருத்துவராக மட்டுமின்றி, மிகச்சிறந்த வரலாற்று அறிஞராகவும் வாழ்ந்து வரும் நண்பர் திரு.சி.பொன்னம்பலம் அவர்களின் இந்நூல், வரலாற்று ஆய்வாளர்களுக்கும், ஆய்வு மாணவர்களுக்கும் பொக்கிஷமாக அமையும் என்பது திண்ணம்.

தமிழகத்திலுள்ள பெரும்பாலான பழங்கோவில்களைக் கண்டு ஆய்ந்து ஆவணப்படுத்தி வரும் இவர், பணிச்சுமை கருதி இந்நூலோடு தனது படைப்பை நிறுத்தி விடாமல், தொடர்ந்து பல வரலாற்று நூல்களை எழுதி, புதைந்து கிடக்கும் நம் வரலாற்றை வெளிக்கொணர்ந்து வருங்கால சந்ததிக்கு உதவிட வேண்டுகிறேன். வரலாறு பேசும் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிட வாய்ப்பு பெற்றதில் பெருமகிழ்வும், இவர் செயலாளராகப் பதவி வகிக்கும் சேலம் வரலாற்று ஆய்வு மையத்தில் இவரோடு இணைந்து பயணிப்பதில் பேருவுவகையும் கொள்கிறேன்.

நன்றி.

— முனைவர். கவிஞர். பெ.பெரியார் மன்னன்,
தலைவர், உலகத் தமிழ்க் கழகம், வாழப்பாடி கிளை.

வாழ்த்துரை

உலகம் உவப்ப உதித்தருள் மாந்தர்
மக்கள் நலனே சிறப்பெனக் கொள்வர்
கெழுதகை அன்பிற் நிறைந்த பண்டுவர்
பொன்னம் அம்பலம் பெயர்நிறை அன்பர்
மக்கள் மருத்துவர் புகழ்ப்பெயர் உடையோர்
இறைநிறை சிற்பங்கள் தளிகள் தோறும்
சென்று ஆய்ந்து மனங்கவர் படங்கள்
உரையுடன் கூடி பதித்த செம்மல்
நூல்பல கற்றுத் தெளிந்த அறிஞர்
பேளூர் தலத்து சரிதம் தந்தாற்போல்
பல்துறை நூல்கள் பலவும் யாத்து
மானுடர் நலம்பேணி வாழ்க
தான்தோன்றி நாதர் தண்ணருள்
சிறக்கவே!

— அன்பன்,
வீ.வீரமணி,
பச்சைகந்த சுவாமிகள் ஆதீனப் புலவர்,
பேளூர்.

வாழ்த்துரை

நூலாசிரியரான மருத்துவர் சி. பொன்னம்பலம் அவர்கள் தமிழகம் அறிந்த சிறந்த வரலாற்றாளரும் தேர்ந்த ஒளிப்படக்காரருமாவார். இவரது படைப்புகளில் வெளிப்படும் தமிழறிவு, வரலாற்று ஆய்வுத் திறன், ஆற்றொழுக்கான மொழிநடை ஆகியன போற்றுதற்குரியதாகும். தங்கள் கரங்களில் தவழும் பேளூர் அன்னை தர்மசம்வர்த்தினி உடனாய அருள்மிகு தான்தோன்றீசுவரர் ஆலய வரலாறு எனும் கோவில் வரலாற்று நூல்களுக்கான இலக்கண நூலினை மருத்துவர் சி.பொன்னம்பலம் அவர்கள் படைத்துத் தமிழ் கூறும் நல் உலகிற்கு அளித்துள்ளார்.

தொன்மைச் சிறப்பு மிக்க ஊரான பேளூர், சோழர் காலம் முதல் நாயக்கர் காலம் வரையிலான கல்வெட்டுகளில் "வெளியூர்" எனக் குறிப்பிடப்படுகிறது. இதுவே காலப்போக்கில் "வேளூர்" என மருவி பேளூர் ஆன வரலாற்றை நூலாசிரியர் விளக்குகிறார். வசிஷ்டர் இங்கு வந்து வேள்வி செய்து இறைவனைப் பூசித்தமையால் வசிஷ்ட நதி எனப் பெயர் பெற்றமை, வேள்வி செய்த இடத்தில் இருந்து கிடைக்கும் திருமண்ணே இங்கு விபூதிப் பிரசாதமாக வழங்கப்படும் புதுமை, வசிஷ்டர் பூசை செய்த ஐம்பூதத் தலங்களில் (பஞ்ச பூதத் தலங்கள்) பேளூரே(நிலம்) முதன்மைத்தலமாக விளங்குதல் உள்ளிட்ட பல்வேறு புராணச் செய்திகளை நூலாசிரியர் விவரிக்கிறார்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான கணம்புல்ல நாயனார் பேளூரைச் சேர்ந்தவர் எனும் செய்தி, மிளகுச் செட்டியார் குறித்த தொன்மம், இக்கோவில் கருவறைத் திருப்பணிகள் செய்த வீரசைவரான பச்சைகந்த சுவாமிகள் குறித்த ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்புகளில் இடம் பெற்றுள்ள செய்திகள் ஆகியன இந்நூலில் தொகுத்து உரைக்கப்பட்டுள்ளன.

கோவிலின் அமைப்பு, கோவில் கட்டடக் கலைச் சிறப்பு, பேரழகு மிக்க சிற்பங்களின் படிமவியல் கூறுகள் ஆகிய அனைத்தும் எல்லோருக்கும் புரியும் வகையில் எளிய மொழியில் எடுத்துரைக்கப் பட்டுள்ளன. வரலாற்று நோக்கில் ஆய்வு நெறிமுறைகளைப் பின்பற்றி படைக்கப்பட்ட இந்நூல், தல வரலாறு / கோவில் வரலாறு நூல்களுக்கான இலக்கணமாக முதல் நூலாக அமைந்துள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளாக நூலாசிரியரின் பல்வேறு வரலாற்று ஆய்வுக்கட்டுரைகள், தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் ஆய்விதழ்களிலும், தமிழ் வெகுஜன இதழ்களிலும் வெளிவந்து கவனம் ஈர்த்துள்ளன. தம் இடையுறாத மருத்துவப் பணிகளுக்கிடையே இறைப் பணிக்கும் நேரம் ஒதுக்கி இந்த அரிய கோவில் வரலாற்று நூலைப் படைத்த நூலாசிரியரின் கடின உழைப்பைப் பாராட்டி மகிழ்கிறேன். மேலும் பல நூல்கள் படைத்துத் தமிழ்த் தொண்டாற்றிட வேண்டுகிறேன். பல்வேறு அருஞ் சிறப்புகள் அமையப் பெற்ற இந்த நூலை அனைவரும் படித்துப் பயனடைய வேண்டும் என அன்புடன் வேண்டுகிறேன்.

— முனைவர். மகாத்மா செல்வபாண்டியன்
சமண பௌத்த ஆய்வாளர்

நன்றியுரை

சேலம் மாவட்டத்தின் புகழ்பெற்ற திருக்கோவில்களில் ஒன்றும், வசிஷ்ட நதிக்கரையில் அமைந்த ஐம்பூதத் தலங்களில் (பஞ்சபூதத் தலங்கள்) முதன்மையானதுமான ‘பேளூர் தான்தோன்றீசுவரர் திருக்கோவில்’ குறித்தான இச்சிறு நூல் பல்வேறு ஆய்வு நூல்களிலிருந்து பெறப்பட்ட தரவுகளைத் தொகுத்தளிக்கப்பட்டதேயாம். இப்புகழ்மிகு திருக்கோவில் குறித்து எழுத வாய்ப்பமைந்தமை எனக்கான வாழ்நாள் பேறாகவே கருதி மகிழ்கிறேன்.

வரலாற்று ஆர்வம் மிக்க ஒத்த எண்ண அலைவரிசை கொண்ட நண்பர்கள் எனக்கு அமைந்தது நற்பேறு. வரலாறு சார்ந்த பணிகளில் எப்போதும் உடன் பயணிக்கும் சேலம் வரலாற்று ஆய்வு மையத்தின் தலைவர் ஆறகளூர் திரு.பொன்.வெங்கடேசன், இணைச்செயலர் முனைவர்.பெரியார் மன்னன், பொருளாளர் திரு.ஜீவநாராயணன் ஆகியோருக்கும், சேலம் வரலாற்று ஆய்வு மையத்தின் நல்ஆலோசகர்களும், கல்வெட்டு அறிஞர்களுமான திரு.விழுப்புரம் வீரராகவன் ஐயா — திருமதி.மங்கை வீரராகவன் அம்மையார் ஆகியோருக்கும், வாழப்பாடி இலக்கியப்பேரவைச்செயலர் திரு.சிவ.எம்கோ அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிச் சிறப்பித்த பெருமகனார் வாழப்பாடி அரிமா சங்கப் பட்டயத்தலைவர் அரிமா. திரு.சந்திரசேகரன் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்த அன்பிற்கினிய சமண பௌத்தவியல் ஆய்வாளர் முனைவர்.மகாத்மா செல்வபாண்டியன் அவர்களுக்கும், நூல் பிழை திருத்தம் மற்றும் இத்திருக்கோவிலில் அமைந்துள்ள தனித்துவமான சைவசித்தாந்த ஐம்மலங்களின் உருவக சிற்பச்சிறப்புகளைத் தெரிவித்து உதவிய பச்சைகந்தசாமி ஆதீனப் புலவர்.திரு.வீரமணி வீராசாமி ஐயா அவர்களுக்கும், ஏனைய நண்பர்களுக்கும், கள ஆய்வில் உதவிய அனைத்து அன்பர்களுக்கும், எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

நூலினை எழிலுற வடிவமைத்து, குறுகிய காலத்தில் அச்சிட்டு வழங்கிய வாழப்பாடி விவேகா பதிப்பகத்தாருக்கும் எனது கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் அனைத்து முயற்சிகளிலும் உடன் துணை நிற்கும் அன்பின் இல்லத்தரசி மருத்துவர். ச.விஜயலட்சுமி அவர்களுக்கும், அன்பு மகள் ஆராதனா அவர்களுக்கும் மிக்க அன்பு.

பேளூர் அன்னை தர்மசம்வர்த்தினி உடனாய அருள்மிகு தான்தோன்றீசுவரர் அருள் அனைவருக்கும் கிட்டட்டும்!

நன்றி!

— மருத்துவர். சி.பொன்னம்பலம்
நூலாசிரியர்

பொருளடக்கம்

1. பேளூரின் தொன்மம்

பேளூர் அமைவிடம் 1
பத்தாம் நூற்றாண்டில் பேளூர் 1
பேளூர் பெயர்க் காரணம் 2
வரலாற்றில் பேளூர் 2

2. தான்தோன்றீசுவரர் ஆலயத் தலவரலாறு

பேளூர் தான்தோன்றீசுவரர் திருக்கோவில் 8
கோவில் தலவரலாறு 8
புராணச் செய்திகளும், செவிவழிச்செய்திகளும் 8
கணம்புல்ல நாயனார் 9
மிளகுச் செட்டியார் 10
பச்சைகந்த சுவாமிகள் 11

3. வரலாற்று நோக்கில் பேளூர் தான்தோன்றீசுவரர் திருக்கோவில்

கோவில் அமைப்பும், கட்டடக்கலையும் 12
மண்டபங்கள் 13
கருவறை 13
தர்மசம்வர்த்தினி எனும் அறம் வளர்த்த அம்மையின் சந்நிதி 14
அர்த்த மண்டபம் 14
மகா மண்டபம் எனும் பெரு மண்டபம் 14
புடைப்புச் சிற்பங்களின் விவரங்கள் 15
யாழித் தூண்களின் சிறப்பு 15
குதிரைவீரன் தூண்கள் 16
வசந்த மண்டபம் 16
கோபுரங்கள் 17
திருச்சுற்று 18
தலவிருட்சம் 18
நவக்கிரகச் சந்நிதி 21
இக்கோவில் குளங்கள் 21
செப்புப் படிமங்கள் 21
ஐம்மலங்களின் உருவகச் சிற்பம் 23
முற்சோழர் கால அரிய வீணாதாரர் செப்புப்படிமம் 24

4. கோவில் கல்வெட்டுகள் காட்டும் செய்திகள்

கல்வெட்டு எண்: 289 | க.ஆ.அ. 239/1969 25
கல்வெட்டு எண்: 290 | க.ஆ.அ. 240/1969 26
கல்வெட்டு எண்: 291 | க.ஆ.அ. 241/1969 27
கல்வெட்டு எண்: 292 | க.ஆ.அ. 242/1969 28
கல்வெட்டு எண்: 293 | க.ஆ.அ. 243/1969 29
காலக்கணக்கீடு மற்றும் கோவிலின் பழமை 30

5. பேளூர் பகுதியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இதர கல்வெட்டுகள்

பத்தாம் நூற்றாண்டு (பொ.யு.948)
முதலாம் பராந்தக சோழன் காலக் கல்வெட்டு 31
மைசூர் மன்னர் மதுரை திருமலை நாயக்கர் இடை நிகழ்ந்த
பேளூர் மூக்கறுப்புப் போர் கல்வெட்டு (பொ.யு. 1623—59) 32
குறிச்சிக் கல்வெட்டு பொ.யு.1649 33
செக்கடிப்பட்டி கல்வெட்டு 17ஆம் நூற்றாண்டு 34

1. பேளூரின் தொன்மம்

பேளூர் அமைவிடம்

சேலம் மாவட்டத்து வரலாற்றுச் சிறப்புமிக்க சிற்பக்கலைகள் மிகுந்த கோவில்களில் குறிப்பிடத்தக்கது பேளூர் தான்தோன்றீசுவரர் திருக்கோவில் ஆகும். சேலத்திலிருந்து சுமார் 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பேளூரினை, அயோத்தியாப்பட்டிணம் வழியாகவும், மற்றோர் வழித்தடத்தில் வாழப்பாடி வழியாகவும் அடையலாம். வசிஷ்ட நதி என்று அழைக்கப்படும் நிவா நதியின் வடப்புறம் அமைந்துள்ளது இக்கோவில். இவ்வூர் தற்போது வாழப்பாடி வட்டத்தில் அடங்கியுள்ளது.

பத்தாம் நூற்றாண்டில் பேளூர்

தொன்மம் வாய்ந்த ஊராக விளங்கி வரும் பேளூரில் கிடைக்கப் பெற்ற பழம் தரவுகளில் மிகப்பழமையானது, இவ்வூர் அங்காளம்மன் கோவிலில் கிடைத்த முதலாம் பராந்தக சோழன் காலத்து (பொ.யு. 948) 41ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டாகும். அதன்படி பொ.யு. 10ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய பழமையையும், சிறப்பையும் பேளூர் பெற்றுள்ளதைப் பறைச்சாற்றுகின்றது.





கல்வெட்டில் நிவா ஆறு

பேளூர் பெயர்க் காரணம்

இவ்வூரில் பாயும் வசிஷ்டநதியின் பழம் பெயர் நிவா நதி. வசிஷ்டநதிக்கு சுவேதா நதி என்றும், வெள்ளாறு என்றும் வேறு பெயர்கள் உண்டு. இவ்வூரில் தலப்புராணப்படி வசிஷ்டர் இங்கு வந்து வேள்வி புரிந்து இந்நதிக்கரையில் அமைந்துள்ள தான்தோன்றீசுவரரை பூசனை செய்ததால் வேள்வியூர் என்று அமைக்கப்பட்டது. பின்னர் வெளியூர் என்று அழைக்கப்பட்டு வேளூர் என மருவி, தற்போது பேளூர் என்று அழைக்கப்படுகிறது. கல்வெட்டுகளில் இவ்வூர் வெளியூர் என்றே குறிப்பிடப்படுகிறது.

வரலாற்றில் பேளூர்

தமிழகம், பல்லவர் ஆட்சிக்குப்பின் சோழர்கள் ஆளுகையின் கீழ் வந்தது. பொ.யு.9ஆம் நூற்றாண்டில் விஜயாலய சோழர் முத்தரையர்களிடமிருந்து தஞ்சையை மீட்டு சோழராட்சிக்கு அடிகோலினார். விஜயாலயன் மகன் முதலாம் ஆதித்தன், பல்லவ, பாண்டியர் ஆதிக்கத்தினை அழித்து, சோழப் பேரரசைத் தலைநிமிரச் செய்தான். இந்த முதலாம் ஆதித்தன் (பொ.யு. 880—907) கங்கரிடமிருந்து கொங்கு நாட்டைக் கைப்பற்றினான். சேலம், திருச்செங்கோடு கல்வெட்டுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

லட்சுமண நாயக்கர் மற்றும் சின்னப்ப நாயக்கர் | சேலம் அரசு அருங்காட்சியகம்

முதலாம் ஆதித்தன் மகன் முதலாம் பராந்தக சோழனின் (பொ.யு. 907—955) 41ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு சமீபத்தில் சேலம் வரலாற்று ஆய்வு மையக் குழுவினரால் பேளூர் அங்காளம்மன் கோவிலில் கண்டறியப்பட்டது. எனவே பேளூர் நேரிடையாக தஞ்சை சோழ மரபினர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பது தெளிவு. பேளூர் தான்தோன்றீசுவரர் திருக்கோவில் திருச்சுற்றில் வடகிழக்கில் அமைந்துள்ள 'வீரபாண்டியன் தலைகொண்ட' எனத் துவங்கும் ஆதித்த கரிகாலன் (பொ.யு. 956—969) காலத்திய 3ஆவது ஆட்சியாண்டு (பொ.யு.959) கல்வெட்டும் இக்கருத்திற்கு மேலும் வலு சேர்க்கிறது. சோழர்களுக்குப் பின்பு தமிழகம் பாண்டியர், அதன் பின்பு முகலாயர்கள், விஜயநகரப் பேரரசு நாயக்க மன்னர்களால் ஆளப்பட்டது.

16ஆம் நூற்றாண்டில் விஜயநகரப் பேரரசு ஆட்சியின் போது தமிழகம் மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்தது.

ஆதித்த கரிகாலன் கால கல்வெட்டினை தன்னகத்தே கொண்ட பேளூர் தான்தோன்றீசுவரர் ஆலயம்.

பேளூர் தான்தோன்றீசுவரர் ஆலய, அரிய பத்தாம் நூற்றாண்டு, கி.பி.959, ஆதித்தகரிகாலன் 3ம் ஆட்சியாண்டில், துறவி நாட்டு திறையை, செம்பியன் மிலாடுடையான் கொள்வதாகவும், இதனை மாற்றுவோர் ஏழா நரகம் புகுவானென தெரிவிக்கும் கல்வெட்டு.

ஸ்வஸ்தி ஸ்ரீ
வீரபாண்டிய
ன்றலை கொண்
ட கோப்பரகேசரி
பன்மற்கு யாண்டு 3
ஆவது பார்க்கவகோ
த்ரத்து மிலாடுடையா
ன் அகலங்கள் ம
லையராதித்தனான செ
ம்பியன் மிலாடுடை
யானேன் துறவி நா
ட்டுராளிகளை ஊராளித்திறை
நாற்கழஞ்சே காலே கொ
ள்வதாக பூவிலை செய்
து குடுத்தேன் செம்பி
யன் மிலாடுடையா
னேன்
இது மா
ற்றுவான்
ஏழா நரக
ம் புகுவான்

நன்றி
திரு.நாமகிரிப்பேட்டை துரைசாமி ஐயா

1. நெல்லூர் முதல் கொள்ளிடம் வரையிலான பகுதி
   தலைமை: கிருஷ்ணப்ப நாயக்கர் | தலைநகர் : செஞ்சி
2. நெல்லூர் முதல் கொள்ளிடம் வரையிலான பகுதி
   தலைமை: கிருஷ்ணப்ப நாயக்கர் | தலைநகர் : செஞ்சி
3. தஞ்சை மற்றும் அதன் சுற்றுப்பகுதி
   தலைமை: விஜயராகவ நாயக்கர் | தலைநகர் : தஞ்சாவூர்
4. மதுரை மற்றும் அதன் சுற்றுப்பகுதி
   தலைமை: வெங்கடப்ப நாயக்கர் | தலைநகர் : மதுரை

-(அ.சிங்காரவேல் 2012:71)

மைசூர் மன்னருக்கும், மதுரை திருமலை நாயக்கருக்கும்
இடைய 1623-59களில் நடந்த
மூக்கறுப்புப் போர் கல்வெட்டு
வாழப்பாடி பேளூர் தோட்டமொன்றில்....
SHRC
Salem Historical Research Center
சேலம் வரலாற்று ஆய்வு மையம்

நன்றி: பண்டைப் பாசனப் பொறியியல்
ஆசிரியர் : முனைவர். கொடுமுடி.ச.சண்முகன்

4.5. பேளூர் லட்சுமண நாயக்கர்

விஜயநகர மன்னர்கள் ஆட்சியின் தொடர்ச்சியாக சேலம், சேந்தமங்கலம் பகுதிகள் அண்ணன் தம்பிகளான நாயக்கர்களின் பொறுப்பில் இருந்தன. வாழப்பாடிக்கு அருகில் பேளூர் என்ற ஊர் உள்ளது. அதன் பழைய பெயர் வெளியூர். அங்கு ஒரு கோட்டை இருந்தது. இன்றும் அதன் எச்சங்கள் உள்ளன. அந்த வட்டாரத்தில் ஏரி குளங்கள் பலவற்றை அமைத்த பெருமை அந்தக் கோட்டையில் இருந்த இலட்சுமண நாயக்கரைச் சேரும்.

கொல்லிமலை அருகில் கருவாட்டாறு என்னும் காட்டாறு உள்ளது. அதன் பழைய பெயர் கரைபோட்டான் ஆறு. அதில் பல சிற்றணைகள் உள்ளன. ஒவ்வொரு சிற்றணையிலிருந்தும் ஒரு வாய்க்கால் பிரிந்து சென்று பாசனத்திற்கு பயன்படுகிறது. கொல்லிமலையின் நிலத்தடி நீர் ஊற்றாக வெளிவருவதால், ஆண்டின் பெரும்பாலான மாதங்கள் இந்த ஆற்றில் தண்ணீர் இருக்கும்.

இலட்சுமண நாயக்கர் கருவாட்டாற்றில் ஒரு அணைக்கட்டி வாய்க்கால் எடுத்து, பேளூர் கோட்டை வரை தண்ணீர் கொணர்ந்ததாகக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. பேளூரை அடுத்துள்ள செக்கடிப்பட்டியில் ஊரின் மேற்கில் ஊர் ரெட்டியார் தோட்டத்தில் நடப்பட்டுள்ள சதுரக் கல்லின் நாற்புறமும் எழுதப்பட்டுள்ளது. கல் ஏழெட்டடி ஆழம் நிலத்தில் பதிந்துள்ளது.

சாமை விளையும் நாடெல்லாம் சம்பா விளைய வேண்டுமென்று குறிச்சிக்கு மேற்கே அணைகட்டி பகல் யிருபதும் இரவு பத்தும் ஆக முப்பது நாழிகையிலே வெளியூர் (பேளூர்) அரண்மனை வாதலிலே தண்ணி யழைப்பித்தார். ராமசமுத்திரமென்று பேரிட்டு பின்னையும் அநேக அணையும் தடாக கூபங்களும் உண்டுபண்ணி (னார்) என்பது கல்வெட்டு வாசகம்.[46]

செக்கடிப்பட்டி கல்வெட்டை நாமகிரிப்பேட்டை திரு.துரைசாமி ஐயா விளக்கிய போது | பேளூர் மரபு நடை | 19.2.17

சின்னம்ம நாயக்கர் & அவரது ஆறு மகன்களின் ஆட்சியறம் கூறிடும் செக்கடிப்பட்டு கல்வெட்டு

மதுரையில் நாயக்கர்கள் ஆட்சி ஏற்படக் காரணம் இருந்தவர் விசுவநாத நாயக்கர் ஆவார். தமிழக வரலாற்றில் பாளையக்காரர் ஆட்சி முறை விசுவநாத நாயக்கர் காலத்தில்தான் தொடங்கப்பட்டது. (பொ.யு. 1529). இவரது ஆட்சிக் காலத்தில் சேலம் உட்பட மகாமண்டலமாக பரந்து விரிந்திருந்த மதுரை நாயக்கராட்சி பகுதி நிர்வாக வசதிக்காக 72 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டன. இவைகள் 72 பாளையப்பட்டுகள் என்று வழங்கப்பட்டன. ஒவ்வொரு பாளையத்துக்கும் ஒரு பாளையக்காரர் நியமிக்கப்பட்டு அவரது தலைமையின் கீழ் அப்பாளையம் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

—(மாமதுரை 2015 :77)

இதன்படி மதுரை நாயக்கர் காலத்தில் பேளூர் பகுதி சேலம் சின்ன பூபாலர் என்று அழைக்கப்பட்ட சின்னமநாயக்கர் எனும் பாளையக்காரரின் ஆட்சியின் கீழ் உட்பட்டு இருந்தது.

17—ஆம் நூற்றாண்டில் மதுரை நாயக்கர்கள் ஆட்சியில், அவர்கள் ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் பாளையங்களாகப் பிரிக்கப்பட்ட போது, சேலம் பகுதி பாளையக்காரராக அறியப்படுபவர் சின்னம நாயக்கர் (எ) சேலம் சின்ன பூபாலர் (உத்தண்டப்ப நாயக்கர்). இவருக்கு 6 மகன்கள்.

1. ராம நாயக்கர்
2. லட்சுமண நாயக்கர்
3. சின்னப்ப நாயக்கர்
4. பெத்த நாயக்கர்
5. திருமலை நாயக்கர்
6. வெங்கடப்ப நாயக்கர்

இவர்களில் ராம மற்றும் இலட்சுமண நாயக்கர் இருவரும் இரட்டைப் பிறவிகள். இந்த அறுவரும் ஆத்தூர், பேளூர் போன்ற பகுதிகளில் மதகுகள் அமைத்து நீர்வளம் பெருக்கி உள்ளனர். லட்சுமண, சின்னப்ப, வெங்கடப்ப நாயக்கர்கள் சேலம் மட்டுமின்றி தர்மபுரி, தென்னார்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சில பகுதிகள் இவர்களின் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது. நாயக்க மன்னர், அவரது புதல்வர்களின் பெயரில் இன்றும் ஆத்தூர் மற்றும் பேளூர் அருகே ராமநாயக்கன் பாளையம், லட்சுமணசமுத்திரம், சின்னம நாயக்கன்பாளையம், பெத்தநாயக்கன்பாளையம், வெங்கடப்பசமுத்திரம் எனும் அவர்தம் பெயர்கள் தாங்கிய ஊர்கள் உள்ளன.

சேலம் வரலாற்று ஆய்வு மையத்தினரால் கண்டறியப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க மூக்கறுப்பு போர் (எ) இரண்டாம் மைசூர் போர் (பொ.யு. 1656) குறித்த கல்வெட்டும், பேளூர் அருகில் அமைந்துள்ள செக்கடிப்பட்டியில் உள்ள 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மதுரை நாயக்கர் கால கல்வெட்டும், இவ்வூர் மதுரை நாயக்கர் ஆட்சியின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்தது என்பதற்கான வரலாற்றுச் சான்றுகளாகும்.

2. தான்தோன்றீசுவரர் ஆலயத் தலவரலாறு

பேளூர் தான்தோன்றீசுவரர் திருக்கோவில்

பெரும் வரலாற்றுத் தொன்மை வாய்ந்த பேளூரில், வசிஷ்ட நதி எனப்படும் நிவா நதியின் ஆற்றங்கரையில் அமைந்துள்ள இக்கோவில், வட கொங்கு நாட்டின் மிகச் சிறந்த தலமாகும்.

இக்கோவில் பற்றி தலப்புராணம் மற்றும் செவிவழிச் செய்திகள் மூலமாக அறியப்படும் கருத்துக்களையும், வரலாற்று நோக்கில் கல்வெட்டுகளின் ஆதார அடிப்படை மற்றும் கோவில் அமைப்பின் வழி கிடைக்கும் செய்திகளையும் பிரித்துக் காண்போம்.

கோவில் தலவரலாறு

பேளூர் என விளங்கும் திருவெள்ளூர் எனும் இக்கோவிலின் தலப்புராணம், கூடற்கிழார் சுத்த சைவராகிய அட்டாவதனம் சொக்கலிங்கப் புலவரால் இயற்றப்பட்டது. செய்யுள் வடிவில் 13 சருக்கங்களாக, 653 செய்யுள்களாக அமைக்கப்பட்டுள்ள இந்நூல் 1927இல் சேலத்தில் பதிப்பிக்கப்பட்டது. பச்சைகந்த சுவாமிகள் மரபில் வந்த புலவர் அப்பாவு மற்றும் புலவர் சோமசேகரன் ஆகியோர் இச்செய்யுளுக்கு உரைநடை வடிவில் விளக்கம் எழுதி 3.2.1993 அன்று இக்கோவில் கும்பாபிஷேக விழாவில் வெளியிட்டுள்ளனர்.

புராணச் செய்திகளும், செவிவழிச்செய்திகளும்

இக்கோவில் அமைந்துள்ள வசிஷ்ட நதி (நிவா நதி), வசிஷ்ட முனிவர் இங்கு வந்து வேள்வி புரிந்து சிவனைப் பூசித்தமையாலேயே இப்பெயர் பெற்றது எனக் கூறப்படுகிறது. வசிஷ்டர் வேள்வி செய்த இடத்திலிருந்து கிடைக்கும் திருமண்ணே இங்கு விபூதிப்பிரசாதமாக வழங்கப்படுகிறது. இந்த ஆலயம் அந்நாளில் நாயக்கர் கால கோட்டைக்குள் அமைந்திருந்திருக்கலாம். பின்னாளில் ஆங்கிலேயர் காலத்தில் கோட்டை அழிந்திருக்கலாம். எனினும் தற்போதும் இப்பகுதி கோட்டை மேடு என்றே அழைக்கப்படுகிறது. வசிஷ்ட முனிவர் பூஜை செய்த ஐந்து தலங்களும் பஞ்சபூதத் தலங்கள் என்று அமைக்கப்படுகின்றது. அவற்றில் பேளூர் முதன்மையானது.

இந்நதியின் கரையில் அமைந்துள்ள பஞ்சபூதத் தலங்கள்:

1. நிலம் — பேளூர் தான்தோன்றீசுவரர்
2. நீர் — ஏத்தாப்பூர் சாம்பமூர்த்தீசுவரர்
3. நெருப்பு — ஆத்தூர் காயநிர்மலேசுவரர்
4. காற்று — ஆறகளூர் காமதாதீசுவரர்
5. ஆகாயம் — கூகையூர் சொர்ணபுரீசுவரர்

பஞ்சபாண்டவர்களில் ஒருவரான அர்ஜுனன் சிவன் நோக்கி தவம் புரிய இவ்வூருக்கு வந்ததாகவும், அவர் பூஜை செய்ய இங்கு தண்ணீர் இல்லாததால் சிவனை வணங்கியதாகவும், சிவன் அர்ஜுனன் முன் தோன்றி இவ்வூரில் வடக்குபுறம் உள்ள மலை மீது அம்பு எய்ததாகவும், அந்த அம்பு எய்த இடத்தில் தோன்றிய ஊற்று நீரே வெள்ளாறு என வழங்கப்பட்டதாகவும் தலப்புராணம் கூறுகிறது. அம்பு எய்த மலை அருநூற்று மலை என வழங்கப்படுகிறது. (அரன் + ஊற்று + மலை). (அரன் = சிவன்).

இவ்வெள்ளாற்றின் கரையில் வசிஷ்டமுனி வேள்விகளும், பூஜைகளும் செய்து பஞ்சபூதங்களை பிரதிஷ்டை செய்ததால் இந்நதி வசிஷ்ட நதி என வழங்குவதாக புராண வரலாறு கூறுகிறது. இக்கோவில் மகாமண்டபத்து நந்திக்குத் தென்புறம் முதல் தூணில் அமைந்துள்ள திருவுருவம் வசிஷ்ட முனியாகவும் கருதப்படுகிறது.

கணம்புல்ல நாயனார்

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான இவர் பேளூரைச் சார்ந்தவர் என்பது ஒரு சாரார் கருத்து. இதற்கு ஆதாரமாக சேக்கிழாரின் பெரிய புராணத்தில் கரைக் கண்டன் சருக்கத்தில் வரும் வேளூர் என்ற குறிப்பைச் சுட்டுகின்றனர். கணம்புல்ல நாயனார் இவ்வூரில் கிடைக்கும் கிணாங்கு எனும் கணம் புல்லை அறுவடை செய்து, அதில் வரும் வருமானம் கொண்டு தினமும் சிவபூஜை செய்து வந்தார். அதற்கும் வழி தடைபட, தன் தலைமுடியையே திரியாக்கி விளக்கேற்றினார் என்பதும் புராண வரலாறு.

கணம்புல்ல நாயனார்

பெரியபுராண உரையாசிரியர் கோவை சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் கணம்புல்ல நாயனாரின் ஊரை விளக்குகிறார்:

"இருக்குவேளூர் — இப்போது பேளூர் (Belur) என வழங்குவது. சேலம் விருத்தாசலம் கிளை இருப்புப்பாதையில் ஆற்றூர் நிலையத்தினின்றும் தெற்கில் மட்சாலை வழி நான்கு நாழிகை யளவில் அடையத்தக்கதாய்ப் பச்சை மலையின் வடசாரலில் உள்ளது; கையில் விளக்கேந்தியபடி நாயனாரது பழைய காலத்துத் திருவுருவம் கொடி மரத்தருகில் உள்ளது. நாயனார் வறுமையினால் இங்கு நின்றும் திருத்தில்லை சென்று திருப்புலீச்சரத்தில் பேறு பெற்றனர்இப்பதியினுக்குத் தலபுராணம் ஒன்று உண்டு. இப்பதியினருகில் மலைச்சாரலில் கணம்புல் மிகுதியுமுண்டு. இந்நாயனார் இங்கு நின்றும் நீங்குமுன்னும் வறுமை வந்தபோது புல்லரிந்து விற்கும் தொழில் பூண்டிருந்தார் என்பது கருதப்படும்."

தான்தோன்றீசுவரர் ஆலய நந்தி மண்டபத்தில் நந்திக்கு முன்பு உள்ள விளக்கேந்திய சிற்பம் கணம் புல்ல நாயனாராகக் கருதப்படுகிறார்.

மிளகுச் செட்டியார்

மாணிக்கம் செட்டி என்ற இயற்பெயர் கொண்ட இவர் மிளகு வியாபாரி. மிளகுப் பொதிகளை ஏற்றிக்கொண்டு பேளூர் வந்தபொழுது இரவு ஆகிவிட்டமையால் இவ்வூரில் தங்கியிருந்தபோது சமைத்துண்ண சுண்டைக்காயை ஒரு கல்லில் வைத்து நசுக்கினாராம். அன்று இரவு அவர் கனவில் இறைவன் தோன்றி தலை நோகிறது. வலிக்கு பயன்படுத்த மிளகு வேண்டும் என்றாராம். மாணிக்கம் செட்டி தன்னிடம் மிளகு இல்லையென்று கூறினாராம். மறுநாள் மாணிக்கம் செட்டி பயணம் மேற்கொண்டு வழியில் மூட்டையை அவிழ்த்து பார்க்கும்பொழுது மிளகெல்லாம் உளுந்தாக மாறி இருந்ததாம். (இவ்விடம் தற்போது உளுந்தூர்பேட்டை என அழைக்கப்படுகிறது). பிறகு இவர் பேளூர் இறைவனை வழிபட, முந்தைய இரவு சுண்டைக்காய் நசுக்கிய இடத்தில் உள்ள திருமண்ணை உளுந்து மூட்டையின் மீது போடச் சொல்லி அறிவுறுத்த, பிறகு மீண்டும் உளுந்தெல்லாம் மிளகாக மாறியதாம். இதன் பின்பு இவர் மிளகுச் செட்டி என்று அழைக்கப்பட்டு, பேளூர் கோவிலுக்குப் பற்பலத் திருப்பணிகள் செய்துள்ளார்.

மிளகு செட்டியார்

மகா மண்டபத்தின் நந்திக்கு வடபுறம், கிழக்கிருந்து மேற்காக அமைந்துள்ள இரண்டாவது சிற்பம் மிளகுச் செட்டியாரின் திருவுருவம் எனவும் கருதப்படுகிறது.

பச்சைகந்த சுவாமிகள்

அருள்மிகு தான்தோன்றி நாதர் ஆலயத்தின் கொடி மண்டபத்தில் பச்சைகந்த சுவாமிகள் உருவச்சிலை காணப்படுகிறது. இவர் வீரசைவக் குலத்தில் (லிங்காயத்) தோன்றியவர். வீரசைவர்கள் இஷ்ட லிங்கத்தினை மேனியில் தரித்திருப்பார்கள். இஷ்டலிங்கம் வைக்கப்படும் பேழை கரடிகை அல்லது ஜெஜ்ஜை எனப்படும். பதினாறாம் நூற்றாண்டில் கர்நாடகா, சிக்கமகளூர், பாலேஹொண்ணூறு ரேணுகாச்சாரியர் வழியில் வந்த பச்சைக்கந்த சுவாமிகள் பேளூரிலும் சிதம்பரத்திலும் மடங்கள் தாபித்து சைவ சமயத்தை வளர்த்து வந்துள்ளார்கள் .இம்மடத்தின் தோற்றம் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லையாயினும், மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் இரண்டாம் ஆதின கர்த்தராக விளங்கியவர் பச்சைகந்த சுவாமிகள் மரபில் வந்தவர் என்பதை அம்மட வரலாறு தெரிவிக்கிறது.

புதுச்சேரி பிரென்ச் அரசாங்கத்தின் திவானாக விளங்கிய ஆனந்தரங்கம் பிள்ளை தனது நாள்குறிப்பில் பேளூர்—சிதம்பரம் பச்சைகந்த சுவாமிகள் ஆதினகர்த்தரைச் சந்தித்து ஆசிபெற்ற விவரத்தைக் குறித்துள்ளார். பச்சைகந்த சுவாமிகள் வடமொழியிலும் தமிழிலும் நன்கு தேர்ச்சி பெற்றவர் என்பதனையும் குறிப்பிட்டுள்ளார்.

—[வால்யூம் ககக(111) பக்கம் அக(81)]

பச்சைகந்த சுவாமிகள் இவ்வூரில் அற்புதங்கள் பல நிகழ்த்தி உள்ளதாக தலப்புராணம் கூறுகிறது. கோவில் மகா மண்டபத்து நந்தியின் தெற்குபுறம் இரண்டாவது தூணில் கூப்பிய கைகளுக்குள் லிங்கம் ஏந்தியபடி உள்ள திருவுருவம் பச்சைகந்த சுவாமிகள் எனக் கருதப்படுகிறது. சிதம்பரம் திருக்கோவில் கிழக்கு கோபுரத்தை பழுது பார்த்து திருப்பணி செய்த காஞ்சிபுரம் பச்சையப்பர் அவர்களை இங்கு ஒப்பு நோக்கலாம்.

பச்சைகந்த சுவாமிகள்

3. வரலாற்று நோக்கில் பேளூர் தான்தோன்றீசுவரர் திருக்கோவில்

பேளூருக்கு வடக்கே அமைந்துள்ள குறிச்சி எனும் ஊரில் அருளும் அம்மன் கோவிலில் அமைந்துள்ள 17ஆம் நூற்றாண்டு திருமலை நாயக்கர் காலக் கல்வெட்டில் பேளூர் தான்தோன்றீசுவரர் கோவில் "வெளியூர் உடையார் தான்தோணிசுவரமுடைய தம்பிரான் கோவில்' எனக் குறிப்பிடப்படுகிறது. பேளூரானது மகாமண்டலத்து வெளியூர் எனவும் குறிப்பிடப்படுகிறது. பிற்காலத்தில் இப்பெயர் திரிந்து, பேளூர் எனவும் தான்தோன்றீசுவரர் எனவும் மாறியிருக்கலாம்.

கோவில் அமைப்பும், கட்டடக்கலையும்

நிவா நதியெனும் வசிஷ்டநதியின் வடகரை வடக்கில் அமைந்துள்ள இவ்வாலயம் 197 அடி நீளமும், 98 அடி அகலம் கொண்டது. மொத்தம் 160 தூண்களைக் கொண்ட கற்றளியாக விளங்குகிறது. கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், வசந்த மண்டபம், இரண்டு திருச்சுற்று கோவில்கள் என முழுமை பெற்ற கோவிலாக உள்ளது. கருவறை தவிர ஏனைய அனைத்து மண்டபங்களும், திருச்சுற்று கோவில்களும் நாயக்கர் காலத்தைச் சேர்ந்தவையாகக் கொள்ளலாம்.

இக்கோவிலில் மொத்தம் ஐந்து கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் கோவிலின் வடகிழக்கு மூலையில் வைக்கப்பட்டுள்ள இரண்டாம் ஆதித்தனாம்,

ராஜராஜசோழனின் அண்ணனாம் ஆதித்த கரிகாலனின் 3ஆம் ஆட்சியாண்டாம் கி.பி.959ஆம் ஆண்டில் வெட்டப்பட்ட கல்வெட்டாகும். ஏனைய மூன்று கல்வெட்டுகளும் 11ஆம் நூற்றாண்டையும், ஒன்று 12ஆம் நூற்றாண்டையும் சார்ந்தது.

எனவே இக்கோவில் பொ.யு. பத்தாம் நூற்றாண்டோ அல்லது அதற்கு முன்போ கட்டப்பட்டிருக்கலாம். வடமேற்கு மூலையில் அமைந்திருக்கும் தவ்வையன்னையெனும் ஜேஷ்டா தேவியின் சிற்பமும் இக்கோவிலின் பழமைக்கு வலுச் சேர்க்கின்றது. இக்கோவிலின் கட்டட அமைப்பு அதிட்டானம், உபபீடம், பாதக்கட்டு போன்ற உறுப்புகளைப் பெற்று சிறப்பாக விளங்குகிறது. கருவறை விமானம், கல், மரம், மண் போன்றவை கலந்து கட்டிய கலப்பு விமான வகையாம் வேசரம் வகையைச் சார்ந்தது.

மண்டபங்கள்

அர்த்த மண்டபம், மகா மண்டபம் மற்றும் வசந்த மண்டபம் என கோவில்களுக்குள்ளேயே மூன்று மண்டபங்களும், கோவிலுக்கு வெளியே கிழக்கு கோபுரத்தை அடுத்து ஒரு மண்டபமும், அதனைத் தொடர்ந்து சிறிய நந்தி மண்டபமும், பின்பு நுழைவு மண்டபமும் அமைந்துள்ளன. இம்மண்டபத்தைத் தாண்டி கோவிலின் குளம் அமைந்துள்ளது. இம்மண்டபங்கள் அனைத்தும் நாயக்கர் கால கலைப்பாணியில் அமைந்துள்ளன. கிழக்கு கோபுரத்துக்கு முன்புறம் அமைந்துள்ள மண்டபத்தின் வடக்கே ஓர் மண்டபம் அமைந்துள்ளது. இங்குள்ள தூண்கள் முற்றுப் பெறாமல் அமைந்துள்ளன. இது பிற்காலச் சேர்க்கையாக இருக்கலாம். மேலும் பச்சை கந்த சுவாமிகள் அமைத்த மடம் இதுவா என்பதும் ஆய்வுக்குரியதே.

கருவறை

தான்தோன்றீசுவரர் என அழைக்கப்படும் கருவறை லிங்கமானது சுமார் மூன்று அடி உயரத்தில் சொரசொரப்பாகவும், வேலைப்பாடுகள் முற்றுப் பெறாமலும் சுயம்பு லிங்கமாக அமைந்துள்ளது. முன்புறமாக தரும நந்தி அழகுற அமைந்துள்ளது. கருவறையின் மேற்கூரை கருங்கற்களால் மூடப்பட்டு விதானம் அமைக்கப்பட்டுள்ளது. கருவறையின் அமைப்பைக் கொண்டு பொ.யு. பத்தாம் நூற்றாண்டு அல்லது அதற்கு முன்பான முற்சோழர் காலமாகக் கணிக்கலாம். இந்த கருவறைத் திருப்பணிகள் பிற்காலத்தில் பச்சை கந்த சுவாமிகள்

என்பவர் செய்தார் என்று தலப்புராணம் கூறுகிறது. கருவறை தென்புற தேவகோட்டங்களில் நர்த்தன கணபதியும், தட்சிணாமூர்த்தியும், மேற்குப்புறத்தில் லிங்கோத்பவரும், வடபுறத்தில் நான்முகனும், துர்க்கையும் அழகுற அமையப் பெற்றுள்ளனர்.

தர்மசம்வர்த்தினி எனும் அறம் வளர்த்த அம்மையின் சந்நிதி

சிவனுக்கு இடதுபுறம் தனிச்சந்நிதி, பெண் வாயிற்காவலர்கள் கொண்டு அழகுற அமைந்துள்ளது. சுமார் மூன்றடி உயரத்தில் நான்கு கரங்களுடன், வலது கீழ்க்கரம் அபய முத்திரையும், இடது கீழ்க்கரம் வரத முத்திரையும் மேலிரு கரங்கள் மலர்கள் ஏந்திய அழகிய கோலத்தில் அன்னை அடியவர்களுக்கு அருள்கிறார். அம்மைக்கு முன்பாக சோம நந்தி எழிலுற அமைந்துள்ளது.

அர்த்த மண்டபம்

இம்மண்டபத்தில் நான்கு தூண்கள் அமைந்துள்ளன. திண்ணைகள் இடம் வலமாக அமைந்துள்ளன. இரு திண்ணைகளுக்கு அடியிலும் நுழைவு வாயில் போன்றதொரு அமைப்பு இருந்து, தற்போது மூடப்பட்டுள்ளது. அண்மையில் புனரமைப்புப் பணியின்போது வலப்புற திண்ணையின் உள்ளே ஐந்து அடி உயர பஞ்சலோக விநாயகர் சிலை கண்டெடுக்கப்பட்டது. சோழர் காலம் அமைப்பையொற்றிய இச்சிலைக்கு தற்போது தினசரி பூசனை நடக்கிறது. அர்த்த மண்டபத்து நான்கு தூண்களிலும் அலங்காரப் பெண் உருவங்களும், கண்ணப்ப நாயனார், மீன் மீதமர்ந்த நந்தி (திருவிளையாடல் புராணம்), போர்க்காட்சிகள் போன்றவை அழகுற புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன. இத்தூண்களின் அமைப்பும், சிற்பங்களின் அமைப்பையும் கொண்டு இம்மண்டபத்தை நாயக்கர் காலகட்டுமானமாகக் கொள்ளலாம். நுழைவாயிலில் இருபுறமும் அழகிய வாயிற்காப்போராம் துவாரபாலகர்கள் கம்பீரமாக அமைந்துள்ளனர்.

மகா மண்டபம் எனும் பெரு மண்டபம்

இம்மண்டபத்தில் மொத்தம் 12 தூண்கள் மிக அழகுற அமைக்கப்பட்டுள்ள இம்மண்டபத்தின் நடுவில் நந்தியம்பெருமான் அமைந்துள்ளார். அதன் பின்புறம் கொடிமரமானது இருபது அடி உயரம், ஒன்றரை அடி சுற்றளவில், உருளைக்கணுக்களுடன் பித்தளைத்தகடு பொருத்தப்பட்டு பலிபீடத்துடன் அழகுற அமைந்துள்ளது. ஆன்ம நந்தி முன்னிரு கால்களையும் மடக்கிய

வண்ணம் சுமார் இரண்டடி அகலத்தில், கழுத்தில் இருமணிமாலைகளுடன் அழகுறத் திகழ்கிறது. முன்புறம் கரங்களில் விளக்கேந்திய இரண்டடி உயரத் திருவுருவச்சிலையொன்று உள்ளது. இவர் கணம்புல்ல நாயனார் என்று கருதப்படுகிறார். மண்டபத்தின் ஒவ்வொரு தூணிலும் சுமார் நான்கடி உயரமுள்ள புடைப்புச் சிற்பங்கள் அழகுற நேர்த்தியாக செதுக்கப்பட்டுள்ளன.

புடைப்புச் சிற்பங்களின் விவரங்கள்

வடக்கு வரிசைத் தூண்கள்
(மேற்கிலிருந்து கிழக்காக),

- அதிகார நந்தி
- மிளகுச் செட்டியார்

தெற்கு வரிசைத் தூண்கள்
(மேற்கிலிருந்து கிழக்காக)

- வசிஷ்ட முனிவர்
- பச்சைகந்த சுவாமிகள்
- நாரத முனி

மகா மண்டபத்தின் நுழைவாயிலை அலங்கரிக்கும் வரிசையில் மொத்தம் நான்கு தூண்கள் அமைந்துள்ளன. வடபுறமும், தென்புறமும் யாழித் தூண்களும், நடுவில் இரு குதிரை வீரன் தூண்களும் அமைந்துள்ளன.

யாழித் தூண்களின் சிறப்பு

தாரமங்கலம் ஆலயம் போன்ற சேலத்தின் பழமையான கோவில்களில் மட்டுமே காணப்படும், யாழியின் வாயினுள் உருளும் கல் உருண்டை அமைப்பு இக்கோவிலிலும் காணப்படுகிறது. வாயைப் பிளந்து கொண்டு பாயும் வடிவில் அமைக்கப்பட்டுள்ள யாழியின் தோற்றமும், அமைப்பும் நேரில் கண்டு மகிழத் தக்கவை. யாழியின் வாயினுள் உருளும் கல் உருண்டையை உள்ளேயே வைத்துச் சுழற்ற முடியுமே தவிர வெளியே எடுக்க முடியாது. பாயும் யாழியின் கால்களில் உள்ள கூரான நகத்தின் அமைப்பும், ஆக்ரோஷமான விழிகளும், செவிமடலும் இது ஓர் கற்பனை உருவம் என்று நம்பவியலாத அளவிற்கு உள்ளது. சேலம் மாவட்ட கோவில்களில் காணப்படும் நாயக்கர் கால கலைப்பணிக்கு இஃதோர் சிறந்த

உதாரணமாம். மேலும் பெருமண்டபத்தின் விதானத்தில் இருபுறமும் அமைந்துள்ள யாழியின் வாயினுள் கல் உருண்டை உருளும் அமைப்பையும் காணலாம்.

குதிரைவீரன் தூண்கள்

மிகவும் நேர்த்தியாக வடிக்கப்பட்ட குதிரை வீரன் தாங்கிய தூண்கள் மகா மண்டபத்தின் மற்றுமோர்ச் சிறப்பு. குதிரை வீரனின் ஆடை வடிவமைப்பு, தலை அலங்காரம், வாள், கேடயம் போன்றவற்றில் உள்ள நுணுக்கமான வேலைபாடுகள், குதிரையின் அலங்கார பணிகள், கடிவாளக்கயிற்றின் நேர்த்தி, வீரன் தன் காலை சேனையில் நுழைத்திருப்பது உட்பட மிகவும் அழகுற கருத்தைக் கவரும் வண்ணம் வடிவமைத்துள்ளனர் நாயக்கர் காலச் சிற்பிகள். அனைத்து தூண்களிலும் புராணக் கதைகளை விளக்கும் சிற்பங்களும், சிவபெருமானின் அவதாரச் சிற்பங்களும் புடைப்புச் சிற்பங்களாக அழகுற செதுக்கப்பட்டுள்ளன. இத்தூண்களின் அமைப்பும், சிற்பங்களின் உருவ அமைப்பும் இவை நாயக்கர் காலப் பாணியைப் பறைச்சாற்றுகின்றன.

வசந்த மண்டபம்

இம்மண்டபமும் நாயக்கர் கால கலைப்பணியே ஆகும். மொத்தம் ஆறு தூண்கள். ஒவ்வொரு தூணிலும் வணக்க நிலையில் ஆண், பெண் சிற்பங்களும், குழந்தை ஏந்திய நிலையில் பெண் சிற்பங்களும் கட்டப்பட்டுள்ளன. இவர்கள் தம்பதியர்களாக இக்கோவிலுக்கு திருப்பணி செய்தவர்களாக இருக்கலாம். இவர்கள் நாயக்கர்களின் பாளையக்காரர்கள் ஆட்சியில் சேலம் சின்னபூபாலர் எனும் சின்னம நாயக்கரின் குடும்பத்தை சேர்ந்தவர்களின் உருவச் சிலைகளா என்பது ஆய்வுக்குரியது.

இம்மண்டபத் தூண்களில் தென் வரிசையில் அர்த்தநாரீஸ்வரர் புடைப்புச் சிற்பமும் அதற்கு எதிரே பிருகு முனிவர் சிற்பமும் அமைக்கப்பட்டுள்ளன. தென்புற முதற் தூணில் உள்ள ஜுரகண்டேசுவரர் சிற்பமும் கவனிக்கத்தக்கது. விஷ்ணு திருமாலின் அவதாரங்களும் இம்மண்டபத்தில் அமைக்கப்பெற்று சைவ — வைணவ ஒற்றுமையை புலப்படுத்தும் வண்ணம் அமைந்துள்ளது. மொத்தத்தில் இக்கோவில் மண்டபங்கள் சிற்பக்கலைக்கூடம் என்றால் மிகையாகாது.

கோபுரங்கள்

இருபது ஆண்டுகளுக்கு முன்பு வரை கிழக்குப் பார்த்து அமைந்த இக்கோவிலின் கிழக்கு வாசல் மிகவும் சிதிலமடைந்து கற்குவியலாகவே காணப்பட்டது. இவ்வூர் மக்களும், ஆர்வலர்களும், சிவனடியார்களும் இணைந்து பேளூர்

நற்பணி மன்றம் என்ற பெயரில் குழு அமைத்து நன்கொடை பெற்று, தற்போது காணப்படும் 92 அடி உயர அழகிய ஏழுநிலை ராஜகோபுரம் அமைக்கப்பட்டது. 10.12.1995இல் துவங்கப்பட்ட இப்பணி பலரின் பங்களிப்போடு நிறைவடைந்து, 24.02.2002 அன்று கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. கற்குவியலாகக் கிடந்த இக்கிழக்கு நுழைவாயிலின் பழமை மாறாது கல்கார வேலைகள் செய்தவர் முத்துகாப்பட்டி ஸ்தபதி இராமநாதன் என்பவர். கோபுரத்தின் சுதை வேலைச் சிற்பங்கள் திருவெண்காடு ஸ்தபதி சந்தான கிருஷ்ணன் என்பவரின் மேற்பார்வையில் நடைபெற்றது. கோபுரத்தின் நுழைவாயில் இருபுறமும் கொடிப்பெண்கள் எனும் நதிப்பெண்கள் அழகுற அமைத்துள்ளனர். இந்த கற்கோபுரம் பிரிக்கும் பணியின் போது அக்காலத்தில் கட்டுமான பணிக்கு பயன்படுத்திய வெண்மணல் மட்டும் கிட்டத்தட்ட எண்பது லாரிகள் அளவு இருந்துள்ளது. (பேளூர் தான்தோன்றீஸ்வரர் கோவில் கும்பாபிஷேக மலர் பக் ; 43)

இந்த மணல் அக்காலத்தில் கோவில் கட்டும்பொழுது கோவிலின் அடித்தள ஸ்திரத்தன்மைக்காக பயன்படுத்தப்பட்டிருக்கலாம். தஞ்சை பெரிய கோவிலின் அடிமட்டமும், மணல் பரப்பி அதன்மீது எழுப்பப்பட்டுள்ளமை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

திருச்சுற்று

திருச்சுற்றில் வடகிழக்கிலும், தென்கிழக்கிலும் சூரிய சந்திரன் சிலைகள் அமைத்துள்ளனர். வடகிழக்கில் அமைந்துள்ள சூரியன் சிற்பம் பிற்காலச் சோழக் கலையாக இருக்கலாம். தென்கிழக்கில் அமைந்துள்ள சிற்பம் சோழர்களுக்குப் பிந்தைய காலமாக இருக்கலாம். தென்புறம் மடைப்பள்ளியை அடுத்து பஞ்சபூத லிங்கச் சந்நிதிகள் மேடையின் மீது அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு லிங்கத்தின் முன்பும் நந்தி அமைந்துள்ளது.

வரிசையாக அவற்றின் விபரங்கள் :

1. ஆகாசலிங்கம் —சிதம்பரம்
2. வாயு லிங்கம் —திருக்காளத்தி
3. தேயு —திருவண்ணாமலை
4. அப்பு —திருவானைக்காவல்
5. பிரித்வி —திருவாரூர்

இதனைத் தொடர்ந்து தெற்கு வாசல் வழியும், அதனை ஒட்டி அறுபத்து மூன்று நாயன்மார்கள் திருவுருவச் சிலைகளும் உள்ளன. இவர்களுக்கு முன்பு தாமரை பீடத்தின் மீது அமைந்த சிவலிங்கமும், நந்தியும் உள்ளன.

தலவிருட்சம்

நாயன்மார்கள் சந்நிதியின் முடிவில் இக்குலத்தில் விருட்சமான பலா மரம் பட்டுபோன நிலையில் உள்ளது. இம்மரத்தின் அடியில் நர்த்தன விநாயகர் சிலையும், வணங்கிய நிலையில் தம்பதிகள் உருவச் சிலையும், தனியாக ஒருவர் வணங்கிய நிலைச் சிற்பமும்

காணப்படுகிறது. இவை அனைத்தும் நாயக்கர்கால கலைப்பணியாக இருக்கலாம். இத்தலவிருட்சத்திற்கு அருகில் மிகப்பெரிய விநாயகர் சிலை சிமெண்டால் அமைக்கப்பட்டு வண்ணம் பூசப்பட்டுள்ளது.

தென்மேற்கு மூலையில் கல்யாண விநாயகர் திருக்கோவில் சந்நிதி அமைந்துள்ளது. இச்சந்நிதியில் இரண்டு கணபதிகள் அமைந்துள்ளனர். இவர்கள் இடம்புரி, வலம்புரி விநாயகர்கள் ஆவர். இவர்களது துதிக்கை முறையே இடது புறமும், வலது புறமும் வளைந்துள்ளது. வலம்புரி விநாயகர் உயரம் சுமார் ஒன்றறை அடி, அகலம் ஒரு அடியும் உள்ளது. இடம்புரி விநாயகர் சிற்பம் சுமார் உயரம் இரண்டு அடியும், அகலம் ஒன்றரை அடியும் உள்ளது. இச்சந்நிதியின் பெயருக்கேற்ப இங்கு ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான திருமணங்கள் நடைபெறுகின்றன. அதனைத் தொடர்ந்து சகஸ்ரலிங்க சந்நிதி அமைந்துள்ளது. உயரம் முக்கால் அடி, அகலம் அரை அடி சிலை, சந்நிதியின் நுழைவாயில் ஆண்/பெண் உருவங்கள் வணங்கிய நிலையில் உள்ளனர். நாயக்கர் கால கலைப்பணியில் அமைத்த இவர்கள் இச்சந்நிதி திருப்பணி செய்தவர்களாக இருக்காலம். இச்சந்நிதி

தவ்வையன்னை (ஜேஷ்டா தேவி)

முன்புறம் சிறிய நந்தி மண்டபம் உள்ளது. உள்ளே மூன்றடி உயரத்தில் நந்தி அமைந்துள்ளது. சந்நிதியின் தெற்கு புறமாக இருபத்தி மூன்று நாகமூர்த்திகள் அமைக்கப்பட்டுள்ளனர்.

மேற்கு சுற்றில் சகஸ்ரலிங்கம் சந்நிதியை அடுத்து ஆறுமுகன் சந்நிதி, வள்ளி தெய்வானை சகிதம் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட மயிலின் மீது அமைந்த வண்ணம் காட்சி தருகிறார். இது சந்நிதியின் முன் லிங்கோத்பவருக்கு கீழே மயில் தன் வாயில் பாம்பினைப் பிடித்து சிங்கத்தின் மேல் வைக்கிறது. அடுத்து கஜலட்சுமி சந்நிதி அமைந்தள்ளது. வடமேற்கு மூலையில் மூத்ததேவியாம் தவ்வையன்னையெனும் ஜேஷ்டா தேவியின் புடைப்புச் சிற்பம் காணப்படுகிறது. காக்கை கொடியுடன் காணப்படும் சிற்பம் இக்கோவிலின் பழமைக்கு சான்று பகர்கின்றது.

சண்டிகேசுவர் சந்நிதி பின்புறம் அமைந்துள்ள பலகைக்கல் சுமார் மூன்று அடி உயரமும், இரண்டு அடி அகலமும் கொண்டு கல்வெட்டுடன் கூடிய புடைப்புச்சிற்பமாக அமைந்துள்ளது. சிவலிங்கத்தை வணங்கிய நிலையில் ஒரு பெண்ணும், இரு கைகள் கூப்பிய நிலையில் ஒரு பெண்ணும், புடைப்பு சிற்பத்தின் மேற்புறமும் இடதுபுறமும் பொ.யு.11ஆம் நூற்றாண்டு கால கல்வெட்டுகள் அமைந்துள்ளது.

நவக்கிரகச் சந்நிதி

இங்குள்ள நவக்கிரகங்களில் சனிபகவான் ஒற்றைக் காலில் நின்றுள்ளது சிறப்பாக கூறப்படுகிறது. நவக்கிரக சந்நிதி எதிரில் வன்னி மரம் உள்ளது. இம்மரத்தின் கீழ் முருகன் நின்ற கோலத்தில் ஆண்டியாக காட்சி அளித்து இருபுறமும் விநாயகர் இடம் பெற்றுள்ளனர். வடகிழக்கு பகுதியில் பைரவரும், பிச்சாடனரும் அமைத்துள்ளனர். அருகே கணம்புல்ல நாயனார் தனிச் சந்நிதியில். உள்ளார்.

இக்கோவில் குளங்கள்

இக்கோவிலில் இரண்டு குளங்கள் அமைந்துள்ளன. ஒன்று கோவிலுக்கு வெளிப்புறம் நீர் வற்றிய நிலையில் காணப்படுகிறது. கோவிலின் வடபுறத்தில் தினப்பூசனைக்கான திருமஞ்சன நீர்க்குளம், நந்தி வாயினுள் நுழைந்து சிங்கமுகம் வழியாக சென்று நீர் எடுத்து வரும் வகையில் முன்னர் அமைக்கப்பட்டிருந்தது. தற்போது அந்த அமைப்பு முழுவதுமாக நீக்கப்பட்டு திருமண மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

சுத்த சன்மார்க்க சங்கம் என்ற பெயரில் இராமலிங்க அடிகளின் மடம் 1972இல் கோவிலுக்கு வெளியே அமைந்திருந்ததாகவும், இம்மடத்தில் அன்னதானம் தொடர்ந்து நடைபெற்று வந்ததாகவும் குறிப்புகள் உள்ளன. கோவிலுக்கு வெளியே வடப்புறம் அமைத்துள்ள முற்றுப்பெறா மண்டபம்தான் இம்மடமா என்பது ஆய்வுக்குரியது.

செப்புப் படிமங்கள்

1920ஆம் ஆண்டு இவ்வாலயத்தின் தென்கிழக்கு

பகுதியில், தோட்டத்தில் உழும் போது பஞ்சலோக சிலைகள் சந்திரசேகர மூர்த்தி, உமா மகேசுவரர், சபாநாயகர், விநாயகர் மற்றும் பூசனைப் பொருட்களும் கண்டெடுக்கப்பட்டன. இவைகள் 11ஆம் நூற்றாண்டு சோழர் கால அமைப்பினைக் கொண்டுள்ளன. இவற்றுடன் 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பெரிய சோமாஸ்கந்தர் செப்பு சிலையும் கண்டெடுக்கப்பட்டது. இச்சிலையின் பீடத்தில் பொ.யு.1625இல் ஆண்ட நாயக்க மன்னர் திம்மப்ப நாயக்கர் மகன் ராமப்ப நாயக்கர் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இப்பீடம் மற்றும் உருவ அமைப்பு சேலம் கோட்டை அழகிரிநாதப் பெருமாள் ஆலய செப்புப் படிமத்தை ஒத்துள்ளது. தற்போது ஆலயத்தில் உள்ளது.

பேளூர் வடக்கே அமைந்துள்ள குறிச்சியில் உள்ள பழமையான தீர்த்தகிரீசுவரர் கோவிலில் இருந்த விக்கிரகங்களும் தற்போது இக்கோவிலில் வைக்கப்பட்டுள்ளன. அண்மையில் இக்கோவிலைச் செப்பனிடும்போது அர்த்த மண்டபம் வலதுபுறம் அமைந்துள்ள திண்ணையின் கீழ் சோழர்கால விநாயகர் செப்புப்படிமம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு, தற்போது வழிபாட்டில் உள்ளது.

சேலம் வரலாற்று ஆய்வு மையம்

ஐம்மலங்களின் உருவகச் சிற்பம்

பலிபீடத்திற்கு மேல் விதானத்தில் உள்ள வித்தியாசமான அபூர்வமான வேறெங்கும் காணவியலாத சைவசித்தாந்த ஐம்மலங்களின் உருவகச் சிற்பம். உயிரைப் பிணிக்கும் மலம் ஐந்து; அவை, மூலமலம், திரோதான மலம், மாயா மலம், கன்ம மலம், மாமாயை என்பர்.

“மோக மிக வுயிர்கள் தொறும் உடனாய் நிற்கும் மூல வாணவ மொன்று, முயங்கி நின்று, பாக மிக வுதவு திரோதாயி யொன்று, பகர் மாயை ஒன்று, படர் கன்மமொன்று, தேக முறு கரணமொடு புவன போகச் செயலாகும் மாமாயைத் திரட்சி யொன்று, என்று ஆக மலம் ஐந்தென்பர்” எனப் பெரியோர் கூறுகின்றனர்.

இங்கு குறிப்பிட்டுள்ள 5 மலங்கள் எவை என்றால்
1. ஆணவம் 2. கன்மம் 3. மாயை 4. மாமாயை 5. திரோதாயி

உயிரைப் பிணிக்கும் மலங்கள் ஐந்திணை நாம் பலிபீடத்தில் பலியிட்டுவிட்டு ,நம்மைத் தூய்மையாக்கி ,எம்பெருமான் ஈசனை வழிபடல் வேண்டும் என்பதும் இதனால் இறை தரிசனம் கிட்டும் என்பதும் சான்றோர் நமக்குக் காட்டிய வழியாகும்.

ஆணவம், கன்மம், மாயை, மாமாயை, திரோதாயி என்னும் ஐம்மலங்களின் உருவகமாக நடுவில் உள்ள மாயை தன்னை பெண்ணாக உருவகித்து மற்றவற்றை ஆண்களாக உருவகித்து, இந்த சிற்பம் புனையப்பட்டுள்ளது. ஆடையற்றத் திகம்பரர்களாகக் காட்டப்பட்டுள்ளதன் காரணம். இந்த ஐந்து மலங்களுக்கும் வெட்கம் என்பதில்லை; ஆதலின் அவ்வாறு காட்டப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது, மாயையின் கையில் இருக்கும் கிளியானது மன்மதனின் உருவாகமாகும்; ஏனெனில் கிளி, மன்மதன் மற்றும் இரதியின் வாகனமாகும்.

உயிரைப் பிணிக்கும் மலங்கள் ஐந்திணை நாம் பலிபீடத்தில் பலியிட்டுவிட்டு, நம்மைத் தூய்மையாக்கி, எம்பெருமான் ஈசனை வழிபடல் வேண்டும் என்பதும் மலங்கள் ஐந்திணையும் உருவகித்து இவ்வாறு சிற்பம் அமைத்துள்ளார்கள் என்பதும் இதனால் பெறப்படுகின்றன.

முற்சோழர் கால
அரிய வீணாதாரர் செப்புப்படிமம்

இந்த ஆலயத்தில் கிடைக்கப்பெற்ற பொ.யு.900—925 காலத்திய முற்சோழர் காலத்தைச் சேர்ந்த அரிய வீணாதாரர் செப்புப்படிமம் குறித்து பொ.யு.1963 ஆண்டில் சென்னை அருங்காட்சியகத்தைச் சேர்ந்த திரு.P.R.சீனிவாசன் எழுதிய ‘South Indian Bronzes’ எனும் நூலில் விளக்கமாக கூறப்பட்டுள்ளது.


BULL., MADRAS GOVT. MUS. (N.S) G.S VIII

PLATE XXIX.

Fig. 56. Vīṇādhara, Belūr, Salem District; about the first quarter of the 10th century A.D.

Fig. 57. Rear view of above.



South Indian Bronzes By P R Srinivasan
Page:116
Plates:XX1X Fig 56/57

4. கோவில் கல்வெட்டுகள் காட்டும் செய்திகள்

இக்கோவிலில் படியெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் மொத்தம் ஐந்து

1. கல்வெட்டு எண்: 289 | க.ஆ.அ. 239/1969

இடம்: தான்தோன்றீசுவரர் கோவில் திருச்சுற்று வளாக வடகிழக்குப் பகுதியில் பைரவர் சந்நிதி முன்புறம். படம் 1
அரசர்: சோழன், இரண்டாம் ஆதித்தன் (எ) ஆதித்த கரிகாலன்.
காலம்: கி.பி. 959 | மொழி: தமிழ்

செய்தி: செம்பியன் மிலாடுடையான் என்பவர் துறிவிநாட்டு ஊராளிகளுக்கு ஊராளித்திறையாக நாற்கழஞ்சேகால் விதித்துப் பெற்றுக் கொள்வதாக உறுதி அளித்தமை.

1. ஸ்வஸ்திஶ்ரீ
2. வீரபாண்டிய
3. ன்றலை கொண்
4. ட கோப்பரசேகரி
5. பன்மற்கு யாண்டு 3
6. ஆவது பார்க்கவகோ
7. த்ரத்து மிலாடுடையா
8. ன் அகலங்கள் ம
9. லையராதித்தனான செ
10. ம்பியன் மிலாடுடை
11. யானேன் துறிவி நா
12. ட்டுறானிகளை ஊராளித்திறை
13. நாற்கழஞ்சே காலே கொ
14. ள்வதாக பூவிலை செய்
15. து குடுத்தேன் செம்பி
16. யன் மிலாடுடையா
17. னேன்
18. இது மா
19. ற்றுவான்
20. ஏழா நரக
21. ம் புகுவான்.



படம் 1

படம் 2

* இக்கல்வெட்டின் அருகிலேயே மேலும் இரண்டு கல்வெட்டுகள் பாதி சிதைந்த நிலையில் அமைந்துள்ளன.
படம் 2

2. கல்வெட்டு எண்: 290 | க.ஆ.அ. 240/1969

இடம்: தான்தோன்றீசுவரர் கோவில் தட்சிணாமூர்த்திக் கோட்டத்தின் அருகில் உள்ள கல்.

அரசர்: ....

காலம்: கி.பி. 11 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ்

செய்தி: கல்லின் முன்புறம் கல்வெட்டில் நூற்றிருபது ஆடுகளும் பன்னிரண்டு கழஞ்சுப் பொன்னும் அளித்த செய்தியும், பின்புறக் கல்வெட்டில் நாற்கழஞ்சுப்பொன் கொடுத்த செய்தியையும் குறிப்பிடுகிறது.

கல்வெட்டு — முன்புறம்

.............கு ....கு ....
...........க்கு குடுத்த ஆடு நூற்றிருபதும்
சன்திறாதித்தயவற் பன்மாகேசுவர ரகைஷ

... பொன் மழ நிறைய் பன்னிரு கழஞ்
சு இப்பொன் சந்திராதிச்சவாக நில
க்க பன்மாகேசுவர ரகைஷ

கல்வெட்டு — பின்புறம்

.....(ண்)டாபற்கு ெ(க)
........(றி) நுக்கு வைத்த பொன்
நாற்கழஞ்சு இது சந்திராதித்தியவற் பன்மா
ஹேசுவர ரகைஷ

* இக்கல்வெட்டின் கீழ்த் தற்கால எழுத்தமைதி கொண்ட 'இச் .... விளக்கு' என்று காணப்பெறுகிறது.

3. கல்வெட்டு எண்: 291 | க.ஆ.அ. 241/1969

இடம்: தான்தோன்றீசுவரர் கோவில் அம்பாள் கருவறையின் அருகில் உள்ள கல். இக்கல்வெட்டில் ஒருபெண் வணங்கிய நிலையிலும், மற்றொரு பெண் சிவலிங்க வழிபாடு செய்வது போலவும் புடைப்புச் சிற்பமாக செதுக்கப்பெற்றுள்ளது. அச்சிற்பத்தின் மேற்புறமும், வலப்புறமும், இடப்புறமும் கீழ்க்கண்ட செய்தி குறிக்கப் பெற்றுள்ளது. படம் 3

அரசர்: ....
காலம்: கி.பி. 11 ஆம் நூற்றாண்டு | மொழி: தமிழ்

செய்தி: வெளியூர் ஆண்டாராகி சிவபெருமான் கோவிலுக்கு எறிமணியையும் கணபதி திருமேனியையும் பிரம்மகண்ணனும் அவர் மனைவி சத்தியகமலதேவியும் செய்வித்த செய்தி.

கல்வெட்டு:

ஸ்வஸ்தி ஸ்ரீ எருத்த தொண்டியான் பிரம
கண் (ணநு) சத்திகமல தேவியூ

வலப்புறம்:

எரிமணியூர் (ம)
டி. கணபதியா
ரைய் சேவி
த்தார் இவ்விரு
வரும் வெளியூர்
ஆண்டாருக்கு ஸ்ரீ

வெளியூர்
ஆண்டார்
ஸ்ரீ பாத
ரக்ஷை

படம் 3

*4. **கல்வெட்டு எண்: 292 | க.ஆ.அ. 242/1969***

இடம்: தான்தோன்றீசுவரர் கோவில் கருவறைத் தரையில் பொருத்தப்பெற்றுள்ள கல்.

அரசர் : ....

காலம் : கி.பி. 11 ஆம் நூற்றாண்டு

மொழி: தமிழ்

செய்தி : தொத்திதம்பி பொன் கொடுத்த செய்தி.

கல்வெட்டு:

1. முடைய தெ
2. த்தி தம்(பி)
3. வளியூர் ற
4. விரு ஓன்றி
5. பொன்

இடம்: கருவறையின் முன்மண்டபத்தில் உள்ள கல்.

செய்தி:

முன்பக்கம்:

1. ப் பாட
2. ழஞ்சு இது
3. வான் வழிச்ச
4. றுவான இது
5. (க)லச்செட்டிச்ச
6. வச்ச விளக்கு

பின்பக்கம்:

1. ஸ்ரீம(த)
2. கெ(க)ப்பா (ெ)
3. (வ)ரை க க்கு மு
4. (ஆ)றா வழுத
5. ள்ளிஇ ... க்

5. கல்வெட்டு எண்: 293 | க.ஆ.அ. 243/1969

இடம்: சோமாஸ்கந்தர் செப்புச்சிலைப்பீடம்.

அரசர்: ....

காலம்: 09.08.1630

மொழி: தமிழ்

செய்தி: தான்தோன்றீசுவரர் கோவிலுக்குச் சிம்மாசனமும் பிரபையும் மன்னர் லோகாண்ட வங்கி நாராயணங்கய்யரவர்களால் கொடுக்கப்பெற்றமை.

கல்வெட்டு:

ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாஹத சகா(ப்தம்)
1552 இதன் மேல் செல்லா தி
ன்ற ப்ரமோதுத வருடம் சிம்
ஹமாஸத்து பூர்வம் பக்ஷத்து
த்ரதியையும் உத்திர நட்சத்திரமும்
ஸோமவாரமும் பெற்ற னாள்
வெளியூர் தான்தோன்றி நாயனா
ருக்க இந்த ஸிம்ஹாஸதமும் ப்ரை
யும் ஸ்ரீ மன்னர் லோகா ண்ட
வங்கி னாராயணங்கரேகாக ....
கொடுகால வயிர சேலம் செ.......
....

கீழ்ப்பகுதி:

மானாயக்காரய்யன் (உப)யம்
குமார ராமய்யைக்கரய்யன்
ஸதா ஸேவை

குறிப்பு : 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்த சோமாஸ்கந்தர் செப்புச்சிலையின் பீடத்தில் காலம் மற்றும் மன்னரின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. (பொ.யு. 1625 — நாயக்கர் காலம். திம்மப்ப நாயக்கர் மகன் ராமப்ப நாயக்கர்) இப்பீடம் மற்றும் உருவம், சேலம் கோட்டை அழகிரிநாதப் பெருமாள் கோவிலில் உள்ள செப்புப் படிமத்தை ஒத்துள்ளது. தற்போது ஆலயத்தில் உள்ளது.

நன்றி: சேலம் நாமக்கல் மாவட்டக் கல்வெட்டுகள்
ஆசிரியர்: முனைவர் அ.கிருட்டிணன்
வெளியூடு: தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்

காலக்கணக்கீடு மற்றும் கோவிலின் பழமை

இத்திருத்தலத்தின் மூலவர் லிங்கம், சண்டிகேசுவரர், தவ்வையன்னை தென்திசைச்செல்வர், அடிமுடிகாணா அண்ணல், திருச்சுற்றின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள சூரியன் சிற்பம் ஆகியவை சிற்ப அமைதியின் தன்மையில் பொ.யு.10 —11 ஆம் நூற்றாண்டு சோழர் காலத்திய படைப்புகளாகலாம். ஏனையவை பிற்கால நாயக்கர் கால ஆட்சியிலும் அதற்குப்பிந்தைய காலகட்ட சேர்க்கையாகவும் கொள்ளலாம்.

இத்தலத்தில் கிடைக்கப்பெற்ற செப்புப்படிமங்களில் காலத்தால் முற்பட்டதாக வீணாதரர் செப்புப்படிமத்தை கருதலாம். இது முற்சோழர் கால படிமவியல் அமைதியில் விளங்குவதாக ஆய்வு நூல்கள் சுட்டுகின்றன. (South Indian Bronzes By P R Srinivasan Page:116 Plates:XX1X Fig 56/57)

எனவே இத்திருக்கோவில் பொ.யு.பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிறு கற்றளியாக எழுப்பப்பட்டு பிற்கால நாயக்க மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் மண்டபங்கள், திருச்சுற்று ஆலயங்கள் என விரிவுபடுத்தியிருக்கலாம்

பல்வேறு வரலாற்றுச் சான்றுகளைத் தன்னகத்தே கொண்டு புகழ்மிகு ஆன்மீகத்தலமாக நிவாநதி எனும் வசிஷ்ட நதிக்கரையில் அமைந்துள்ள இத்தொன்மையான பேளூர் தான்தோன்றீஸ்வரர் திருக்கோவில்அனைவரும் நேரில் கண்டு களிப்புறத்தக்கதாகும்

....

துணை நூல் பட்டியல்

1. பேளூர் என விளங்கும் திருவேள்வியூர் ஸ்தல புராணம்.
2. பேளூர் தான்தோன்றீசுவரர் திருக்கோவில் கும்பாபிஷேக மலர் 24.02.2002
3. Salem Encyclopedia, Rajannan
4. மாமதுரை, பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையம் 2015
5. மதுரை நாயக்கர் வரலாறு, அ.கி.பரந்தாமனார்
6. சேலம் நாமக்கல் மாவட்ட கல்வெட்டுகள்
7. தமிழகத்தில் விஜய நகர ஆட்சி — தஞ்சை சரஸ்வதி மஹால் நூலக வெளியீடு
8. கொங்கு களஞ்சியம் — இரண்டாம் தொகுதி
9. சோழர் வரலாறு — டாக்டர் மா.இராசமாணிக்கனார்

5. பேளூர் பகுதியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இதர கல்வெட்டுகள்



பத்தாம் நூற்றாண்டு (பொ.யு.948)
முதலாம் பராந்தக சோழன் காலக் கல்வெட்டு

காலம் சிதைத்திட்ட, முதலாம் பராந்தக சோழன் காலக் கல்வெட்டு (பத்தாம் நூற்றாண்டு பொ.யு.948) பேளூர் அங்காளம்மன் கோவிலில் இன்றும் வழிப்படபப்படுகிறது. 'ஸ்வஸ்திஸ்ரீ மதிரையும் ஈழமுது கொண்ட கோப்பரகேசரி பன்மருக்கு' எனத் துவங்கி எட்டு வரிக் கல்வெட்டு காணப்படுகிறது. மதுரையும், ஈழமும் கொண்ட கோப்பரகேசரியாம் முதலாம் பராந்தக சோழனின் 41ஆம் ஆட்சியாண்டில் இந்த கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

இன்றைய ஆத்தூர் அருகே உள்ள நரசிங்கபுரம் என்ற ஊரில் உள்ள சிவன் கோவிலுக்குப் பகலில் விளக்கு எரிக்க தானம் செய்த செய்தியைக் கல்வெட்டு குறிக்கிறது.

வசிஷ்ட நதி சோழர் காலத்தில் வெள்ளாறு எனப்பெயர் தாங்கி, வெள்ளாற்றங்கரை நகரமாம் பேளூர், வெள்ளூர், திருவெள்ளூர் என்றழைக்கப்பட்டு, பின் வெளியூராகி, இன்றைய பேளூரானது. இக்கல்வெட்டின் மூலம் ஆத்தூர், பேளூர் பகுதிகள் 10ஆம் நூற்றாண்டில் சோழர்களின் ஆட்சியின் கீழ் இருந்திருக்கும் என உணர முடிகிறது.

மைசூர் மன்னர் மதுரை திருமலை நாயக்கர் இடை நிகழ்ந்த பேளூர் மூக்கறுப்புப் போர் கல்வெட்டு (பொ.யு. 1623—59)

இடம்: பேளூரில் அங்காளம்மன் கோவில் முன்புறம்
காலம்: 17ஆம் நூற்றாண்டு. சின்னமநாயக்கர் (சின்ன பூபாலர்) திருமலை நாயக்கருக்கு கீழ் பாளையக்காரராக இருந்த காலம்.
அமைப்பு: கல்வெட்டின் மேல் சிவலிங்கம், நந்தி, சூரியன், சந்திரன், பிள்ளையார் சுழி புடைப்பு. உயரம் 74" நீளம் 15" அகலம் 7"
கல்லின் நாற்புறங்களிலும் கல்வெட்டு. ஒரு பக்கத்தில் குறுவாள்.

செய்தி: மதுரை சொக்கநாத சுவாமிக்குத் தேருக்கு வடம் அளித்த சின்ன பூபாலராயன், சின்னமசமுத்திரத்தில் மடம் அமைத்த சேலம் சின்னபூபாலராயரின் மகன் லட்சுமண பூபாலராயர் குறித்த விபரம்.. திருமலைநாயக்கரின் ஓலைப்படி சின்னபூபாலரின் மகன் வேங்கடப்பநாயக்கர், மற்ற பாளையகாரர்களுடன் இணைந்து, திருச்சி சென்று மூக்கறுப்பு பேரில் பங்கு பெற்றது. 'மீசையுடனே மூக்கறுப்பிச்சார்' என்ற வார்த்தைகள் மூக்கறுப்பு போர் நடந்தமைக்கான முதல் கல்வெட்டு சான்றாகும்.

கல்வெட்டுச் செய்தி:

1. சின்ன பூபாலராயன் (சின்னமநாயக்கர்) மதுரை சொக்கநாத மீனாட்சியம்மை தேருக்கு வடம் கொடுத்தார். (செக்கடிபட்டி கல்வெட்டில் காணப்படுகிறது)
2. சேலம் சின்ன பூபாலராயர் குமாரர் லட்சுமண பூபாலராயர் சின்னமசமுத்திரம் & கலியாணிகிரியில் மடங்களை ஏற்படுத்தினார்.
3. விசுவநாத நாயக்கர், திருமலை நாயக்கருக்காக தஞ்சாவூர் அடப்ப செவ்வய அச்சுதனாயக்கர், கறம தேவராயர்,திருச்சிராப்பள்ளி முத்திரையர் யாவரும் இனிமேல் திருமலைநாயக்கர் நமக்கு சகமாய் இருப்பார் எனவும்,மதுரை, தஞ்சாவூர், செஞ்சி படைகள் சேலம் சின்னபூபாலராயரின் ராஜியத்துக்கு வரவேண்டும் என உபசார ஓலை அனுப்பப்பட்டது. இன்ன நேரத்தில் உதவ வேண்டும் என வேங்கடப்ப நாயக்கர் திருச்சிராப்பள்ளிக்கு வந்து ராயர்பாளையத்தில் குந்தி மீசையுடனே மூக்கறுப்பிச்சார். திருமலை நாயக்கருக்கு ஆதரவாய் பொதுசங்கம் மூலம் பூதானம், மடங்கள் அளிக்கப்பட்டது.
4. இந்த தானத்துக்கு அழிவு செய்பவர் கங்கைகரையிலும், காசியிலும், பஞ்சமாபாதகங்கள் செய்த, மாதா, பிதாவை கொன்ற பாவம் பெறுவார்கள்.
5. பிருது மூக்கநூரு பொம்மைய நாயக்கர் குமாரன் தாதா நாயக்கர் சதாசோவை.

குறிச்சி கல்வெட்டு பொ.யு.1649

காலம்: 17ஆம் நூற்றாண்டு பொ.யு.1649
மன்னர்: திருமலை நாயக்கர்



செய்தி: குறிச்சி என்ற ஊரை பேளூர் தான்தோன்றீசுவரர் கோவிலுக்கு தானமாக அளித்தது குறித்து.

கல்வெட்டுச் செய்தி:

1. இப்பகுதி வேங்கடபதி ராயர் பொறுப்பில் இருந்துள்ளது.
2. விசுவநாத திருமலைநாயக்கர் கால கல்வெட்டு
3. பேளூரானது மகாமண்டலத்து வெளியூர் என குறிப்பிடப்பட்டுள்ளது.
4. பேளூர் சிவன் கோவில் வெளியூர் உடையார் தான்தோணிசுவரமுடைய தம்பிரான் கோவில் எனக்குறிப்பு.
5. கொண்டப்பையன் என்பவர் இப்பகுதியின் முக்கியமானவராக குறிப்பிடப்படுகிறார்
6. குறிச்சியின் நஞ்சை, புன்செய் நிலங்கள், நான்கு எல்லையையும் வரையறுத்து, மீன்கள் உள்ள சுனை, மேல் நோக்கிய மரம், கீழ் நோக்கிய கிணறு இன்னும் பல உரிமைகளை கோவிலுக்கு தானமிட்டுள்ளனர்.
7. பூதானம் எனில் ஒரு கிராமத்தையே(குறிச்சி) தானமாகக் கொடுத்தல்.
8. இத்தானத்தைக் காப்பவன் கங்கையில் நீராடிய பலனை பெறுவான். அழிப்பவன் கங்கை கரையிலே தாய், தந்தையை கொன்ற பாவத்தை அடைவான் என்று குறிப்பு.

செக்கடிப்பட்டி கல்வெட்டு 17ஆம் நூற்றாண்டு

அரசர்: திருமலை நாயக்கர் | காலம்: 17ஆம் நூற்றாண்டு | மொழி: தமிழ்
செய்தி: சின்னமநாயக்கரின் மக்கள் அறுவரில் இலட்சுமணநாயக்கர் பேளூரில் கோட்டை அமைத்து ஆற்றில் அணைகள் கட்டியதையும், மதுரை மீனாட்சி சுந்தரேசுவர் தேருக்குச் சங்கிலி செய்த திருவனந்தல் பண்டாரத்துக்கு இலக்குமண சமுத்திரத்தில் இருபத்து நாலடி கோலால் நூறுகுழி நிலம் கொடையாக அளித்த செய்தியும், தந்தை சின்னம்ம நாயக்கன் பெயரில் மடம் அமைத்ததையும் குறிப்பிடுகிறது.

கல்வெட்டுச் செய்தி:

1. 17ஆம் நூற்றாண்டில் பேளூர் பகுதியைச் சின்னம்ம நாயக்கரும் அவர் வாரிசுகளும் ஆட்சி செய்துள்ளனர்.
2. சின்னபூபாலர் சின்னம்ம நாயக்கருக்கு பெத்தநாயக்கன் (பெத்தநாயக்கன் பாளையம்), திருமலை நாயக்கர், ராம நாயக்கர் (ராமநாயக்கன் பாளையம்), லட்சுமண நாயக்கர் (லட்சுமணபுரம்), வேங்கடப்ப நாயக்கர், சின்னப்ப நாயக்கர் என ஆறு மகன்கள். ராமநாயக்கரும் லட்சுமண நாயக்கரும் இரட்டைச் சகோதரர்கள்.
3. ஆறு பேருக்கும் ஆட்சி பகுதியைப் பிரித்து கொடுத்துள்ளனர்..
4. பேளூரில் கோட்டை கட்டி ஆண்ட இலட்சுமண நாயக்கரால் இக்கல்வெட்டு வெட்டப்பட்டிருக்கலாம்.
5. மதுரை சொக்கர் மீனாட்சியம்மை தேருக்குச் சங்கிலி வடம் செய்து கொடுத்துள்ளார்.
6. நிலங்களை அளக்க 24 அடி கோல் வழக்கத்தில் இருந்துள்ளது.
7. ஆத்தூர் பகுதியில் வேங்கடப்ப நாயக்கர் கல்கோட்டை இட்டு ஆட்சி செய்துள்ளார்.
8. லட்சுமண நாயக்கர், வேங்கடப்ப நாயக்கர், சின்னப்ப நாயக்கர் ஆண்ட பகுதிகள்: ஆத்தூர், பேளூர், சேலம் திருமணிமுத்தாறு வரை, சேருமாமலை புதுக்கோட்டை, முகனாடு வடகரை, மேச்சேரி, வெள்ளாறை தென்கரைக்கோட்டை , சேலம் கச்சிப்பெருமாள் பாளையம், உலகிய நல்லூர், கூகையூர், வெண்பார்க்கை (வெண்பாவூர்), வாலிகண்டாபுரம், பச்சமலை ஆத்திநாடு, குறும்பூர், உத்தமசோழபுரம், இ(ராசி)புரம்.
9. இக்கல்வெட்டிலும் பேளூர், வெளியூர் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.
10. லட்சுமண நாயக்கர் பேளூர் ஆற்றுநீரைக்கண்டு சாமை விளையும் காட்டில் சம்பா விளைய வேண்டும் என, குறிச்சிக்கு மேற்கே அணையை கட்டி ராமசமுத்திரம், சின்னப்ப சமுத்திரம், ஏற்றசமுத்திரம், லட்சுமண சமுத்திரம் என்ற ஏரிகளை அமைத்தார், இருபது பகல்,பத்து இரவு, முப்பது நாழிகையில் வெளியூர் (பேளூர்) அரண்மனை வாசலுக்குத் தண்ணீர் வரவழைத்து ராமசமுத்திரம் என பெயரிட்டார்.
11. பின்னர் நிறைய அணைகளையும், தடாகங்களையும், கூபங்களையும் உண்டு பண்ணினார்கள்.

நம் மண் செழிக்க உதவும் அன்னையாம் வசிஷ்ட நதி,
சோழர் காலத்தில் வெள்ளாறு எனும் திருநாமம் கொண்டதனால்,
திருவெள்ளூர் என அழைக்கப்பட்டு, பின் வெளியூர்...
வேளூர் எனத்திரிந்து, நாயக்கர் காலத்தில்
பேளூர் என்றான திருத்தலத்தின் நதிக்கரையுறையும்,
அந்நாளில் வெளியூர் தாந்தோணிசுவரமுடைய
தம்பிரான் கோவிலென போற்றப்பெற்ற,
அன்னை தர்மசம்வர்த்தினி உடனாய
தான்தோன்றீசுவரர் ஆலய வரலாற்றினை,
அதன் சிறப்புகளை மருத்துவர். சி.பொன்னம்பலம் அவர்கள்
ஐயந்திரிபற இந்நூலில் விளக்கியுள்ளார்.

முதலாம் பராந்தகர், ஆதித்த கரிகாலர்,
நாயக்கர் கால கல்வெட்டுகள் மூலம் பேளூர் நகரின்
காலச்சூழல் மாற்றங்களை, அதன் பரிமாணங்களை
ஆராய்ந்து ஆற்றப்பெற்ற இத்திரவியத்தை வெளியிடுவதில்
சேலம் வரலாற்று ஆய்வு மையம் அகமகிழ்வடைகிறது.

- ஆறகழூர் பொன் வெங்கடேசன்
தலைவர், சேலம் வரலாற்று ஆய்வு மையம்